வைதிக தர்ம வர்த்தினி

மார்-12 ஜூன்-12

1959

N59.12.L.
125430.

# விகாரிஞூ புரட்டாசிமீ வர்ஷருது. தக்ஷிணாயனம்.

| தேதி | இங்கிலீஷ் | வாரம் | திதி. | நா. வி. | நக்ஷ. | நா. வி. | யோ. | ப்ரா திதி. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 17 (ஸெப்டம்பர் மீ 1959 ௵) | வியா. | பௌ. | 00-47 | பூரட். | 15-52 | சி. | ப்ர. |
| 2 | 18 | வெள். | ப்ர. | 2-07 | உத்தி. | 19-07 | சி. | த்வி. |
| 3 | 19 | சனி | த்வி. | 4-50 | ரேவ. | 23-40 | சி. | த்ரி. |
| 4 | 20 | ஞா. | த்ரி. | 8-47 | அசு. | 29-25 | சி. | சது. |
| 5 | 21 | திங். | சது. | 13-50 | பர. | 36-05 | சி. ம. | பஞ். |
| 6 | 22 | செவ். | பஞ். | 19-40 | க்ருத். | 43-25 | சி. அ. | — |
| 7 | 23 | புதன் | ஷஷ்த். | 25-50 | ரோ. | 50-50 | சி. | ஷஷ்த் |
| 8 | 24 | வியா. | ஸப். | 31-50 | மிருக. | 57-55 | ம. | சப். |
| 9 | 25 | வெள். | அஷ். | 37-05 | திரு | 60-00 | சி. | அஷ் |
| 10 | 26 | சனி | நவ. | 41-07 | ,, | 4-05 | சி. | நவ. |
| 11 | 27 | ஞா. | தச. | 43-35 | புன. | 8-55 | சி. | தச. |
| 12 | 28 | திங். | ஏகா. | 44-15 | பூச. | 12-07 | சி. | ஏகா. |
| 13 | 29 | செவ். | த்வா. | 43-00 | ஆயி. | 13-30 | சி. | த்வா. |
| 14 | 30 | புத. | த்ர. | 40-05 | மக. | 13-08 | சி. அ. | த்ர. |
| 15 | 1 | வியா. | சதி. | 35-38 | பூர. | 11-08 | சி. ம. | சதி. |
| 16 | 2 | வெ. ● | அமா. | 29-55 | உத். | 7-45 | சி. அ. | அமா |
| 17 | 3 | சனி | ப்ர. | 23-15 | ஹஸ். | 3-20 | ம. அ. | ப். த் |
| | | | | | சித். | 58-08 | | |
| 18 | 4 | ஞா. | த்வி. | 15-58 | சுவா. | 52-35 | சி. | த்ரி. |
| 19 | 5 | திங். | த்ரி. | 8-28 | விசா. | 47-00 | ம. சி. | சது. |
| 20 | 6 | செவ் | சது. | 1-00 | அனு. | 41-43 | சி. | பஞ். |
| | | | பஞ். | 53-55 | | | | |
| 21 | 7 (அக்டோபர் மீ) | புதன் | ஷஷ்த். | 47-30 | கேட். | 37-02 | சி. ம. | ஷஷ்த் |
| 22 | 8 | வியா. | ஸப். | 41-57 | மூல. | 33-10 | சி. | சப். |
| 23 | 9 | வெள். | அஷ் | 37-25 | பூரா | 30-17 | சி. | அஷ் |
| 24 | 10 | சனி | நவ. | 34-02 | உத்தி. | 28-33 | சி. | நவ. |
| 25 | 11 | ஞா. | தசமி | 31-52 | சிர. | 28-00 | அ. ம. | தச. |
| 26 | 12 | திங். | ஏகா. | 30-55 | அவி. | 28-37 | சி. | ஏகா. |
| 27 | 13 | செவ். | த்வா. | 31-10 | சத. | 30-23 | ம. | த்வா. |
| 28 | 14 | புதன் | த்ர. | 32-32 | பூரட். | 3-17 | அ. சி. | த்ர. |
| 29 | 15 | வியா ○ | சதி. | 35-00 | உத்தி. | 37-13 | சி. | சதி. |
| 30 | 16 | வெள். | பௌ. | 38-30 | ரேவ. | 42-10 | சி. அ. | பௌ |

6உ கிருத்திகை. 12, 26உ ஏகாதசி. 14, 27உ ப்ரதோஷம்.
16உ மஹாளய அமா. 24உ ஸரஸ்வதிபூஜை. 25உ விஜயதசமி.

**ஜகத்திற்கு மாதா பிதா உமையும் சிவனும்.**

125430

வைதிக தர்ம வர்த்தனீ



விகாரிஞூ புரட்டாசிமீ
மலர் 12] [இதழ் 12.
தனிப்ரதி அணு 7.
வருஷசந்தா ரூ. 5
கார்யாலயம்: கடவாசல்,
வடகால் P.O. (Via.) சீர்காழி
(தஞ்சை ஜில்லா.)

## பொருளடக்கம்.

| | |
|---|---|
| ஆச்வலாயநீய ஸந்த்யா | 359 |
| தைத்திரீய உபநிஷத் | 365 |
| தியாகோபநிஷத் | 369 |
| குமதி ஸுமதி ஸம்வாதம் | 371 |
| ஆயுர்வேதம் | 375 |
| சாந்தி விலாஸம் | 377 |
| புரட்டாசிமீ கோசாரபலன் | 382 |
| ஹாலாஸ்ய மஹிமை | 385 |
| விநாயக புராணம் | 173–184 |

## நவரஸப் பகுதி.

(கௌண்டின்யன்)

**அதர்மமும் அப்படித்தான்.** செய்த தர்மத்தைக் கூறினல் அந்த தர்மம் பலனைத்தராது என்ருர் ஒருவர். அதர்மம் செய்தவர் தான் செய்ததைக் கூறினல் அதுவும் அப்படித்தான். ஆனல் செய்த தர்மத்தைக் கூறுவர். அதர்மத்தைக் கூறமாட்டார் என்ருர் ஸ்ரீ பரம குரு.

**லாரி லாரியாக ஏற்றி செல்கிறேன்.** ஒரு மூட்டையையாவது சுமந்து உதவலாமே! சிஷ்யர்கள் செய்யும் பாபம் குருவைச் சாரும். அது எனக்கு லாரி லாரியாக வந்துளது. ஒரு புண்யம் செய்து பாபத்தையேனும் போக்கினல் என் மூட்டை குறையும் ஸ்ரீ பரம குரு.

**மூக்கை மூடி, தூரேசெல் லுகிருர்.** பரிமளம் என ஒரு நாலுக் குப் பெயர். அதன் ஸித்தாந்தம் பிடிக்காதவர் அதற்கு கண்டனம் எழுதி ஒரு ரஸிகரிடம் கூறினர். ரஸிகர் பரிமளகண்டனமா? அப்படியானல் அது நாற்றமன்ரே என்ருர்.

**பணத்தட்டு தனிகருக்கு வேண்டாம்.** ஒரு வித்வானுக்குத் தட்டு நிறைய தநத்தை அளித்தார் ஒரு வள்ளல். அழகான அந்த தட்டையும் மூட்டைகட்டினர் வித்வான். ஸ்வாமி! பணம் தான் உமக்கு என்ருர் வள்ளலின் பணியாளன். தாதாவுக்கு பணத்தட்டு வேண்டாம். 'நாங்கள் தான் பணத்தட்டால் இங்கு வருகிருேமே'' என்ருர் வித்வான். சிலேஷையைக் கேட்ட ரஸிகரான தாதா ஸந்தோஷத்துடன் அவருக்கே இருக்கட்டுமது என்ருர்.

**ஒன்றே கஷ்டமில்லா வ்ருத்தி:** உத்யோக விருத்தி வியாபார விருத்தி க்ருஷி விருத்தி எல்லாம் மிக கஷ்டமானதே. கஷ்டமில்லா வ்ருத்தி எதுவுமில்லை! ஏன் நிவிருத்தி கஷ்டமில்லாதது தானே? விருத்தி–ஜீவனம், நிவிருத்தி–ஒழிவு.

**ஸபாஜந பத்ர மென்ருல்?** ஸம்ஸ்கிருத ஸபை ஸ்ரீ ஜகத்குருவுக்கு ஓர் (ஸபாஜந) அபிநந்தந பத்ரமளித்தது. ஜநபத்ரமென்ருல் என்ன என்று தெரியாததுபோல் கேட்டு மற்ற இரு அர்த்தங்களிருப்பதைக் காட்டி வித்வான்களுக்கு விருந்தளித்தார். 1 அருகில் இருக்கும் ஜனங்கள்யார்? ஸபாஜநங்கள் அவர்களளிக்கும் பத்ரமா? 2 பத்ரத்தை எதில் வைத்திருக்கிறீர்கள்? பாஜநத்தில். ஆனல் பாஜநத்துடன் கூடியதா?

**மேட்டில் ஏறுமா?** ஒரு கிரஹஸ்த வித்வானிடம் ஓர் துறவி உயர் பீடத்திலிருந்து பாடம் கேட்டார். கடினமான விஷயம்! ஏறவில்லையே எனக்கு. மேட்டில் மற்றவர்களுக்கு ஏறுகிறதே! என்ருர் ஸ்வாமிகள். மேட்டில் ஏறுமா? பள்ளத்தில்தான் ஏறும்.

*நம் தாய் தந்தையைப் பார்வதீ பரமசிவனுக எண்ணு.*



# ஆச்வலாயநீய ஸந்த்யாவந்தனம்.

(ஆவணிமீ தொடர்ச்சி.)

ओं चित्रन्देवाना मुदगादनीक ञ्चक्षुर्मित्रस्य वरुणस्याग्नेः । आप्रा-
द्यावापृथिवी अन्तरिक्षं सूर्य आत्मा जगतस्तस्थुषश्च । सूर्यो देवी
मुषसंरोचमानां मर्यो नयोषा मभ्येति पश्चात् । यत्रानरो देवयन्तो
युगानि वितन्वतेप्रति भद्रायभद्रम् । भद्रा अश्वा हरितस्सूर्यस्य
चित्रा एतग्वा अनु माद्यासः । नमस्यन्तो दिव आपृष्ठमस्थुः परिद्या
वा पृथिवीयन्ति सद्यः । तत्सूर्यस्य देवत्वन्तन्महित्वं मध्या कर्तो
विततं संजभार । यदेदयुक्त हरितस्सधस्थादाद्रात्री वासस्तनुतेसि-
मस्मै । तन्मित्रस्य वरुणस्याभिचक्षे सूर्यो रूपङ्कृणुतेद्योरुपस्थे ॥
अनन्तमन्यद्रुशदस्यपाजः कृष्णमन्यद्धरितस्सम्भरन्ति ॥ अद्यादेव-
उदिता सूर्यस्य निरंहसः पिपृता निरवद्यात् । तन्नोमित्रो वरुणो
मामहन्तामदितिः सिन्धुः पृथिवी उतद्यौः ॥

ஓம் சித்ரந்தே$^{3}$வாநா முத$^{3}$கா$^{3}$ த்$^{3}$னீகஞ்ச க்ஷுர்மித்ரஸ்ய வருணஸ்யாக்$^{3}$னே: | ஆப்ராத்$^{3}$யாவாப்ருதி$^{2}$வீ அந்தரிக்ஷம் ஸூர்ய ஆத்மா ஜக$^{3}$தஸ்தஸ்து$^{2}$ஷஸ்ச | ஸூர்யோ தே$^{3}$வீ முஷஸம் ரோசமாணம் மர்யோ நயோஷாமப்$^{4}$யேதி பஸ்சாத் | யத்ரா நரோ தே$^{3}$வயந்தோ யுகா$^{3}$னி விதன்வதே ப்ரதிப$^{4}$த்$^{3}$ராய ப$^{4}$த்$^{3}$ரம் || ப$^{4}$த்$^{3}$ரா அஸ்வா ஹரிதஸ்ஸூர்யஸ்ய சித்ரா ஏதக்$^{3}$வா அனுமாத்$^{3}$யாஸ: | நமஸ்யந்தோதி$^{3}$வ ஆப்ருஷ்ட$^{2}$ மஸ்து$^{2}$: பரித்$^{3}$யாவாப்ருதி$^{2}$ வியந்தி ஸத்ய: | தத் ஸூர்யஸ்யதே$^{3}$ வத்வந்தங் மஹித்வம் மத்$^{4}$யாகர்தோர் விததம் ஸஞ்ஜபா$^{4}$ர | யதே$^{3}$த$^{3}$ யுக்த ஹரிதஸ்ஸத$^{4}$ஸ்தா$^{2}$ தா$^{3}$த்$^{3}$ ராத்ரீ வாஸஸ் - தனுதேஸி மஸ்மை | தன்மித்ரஸ்ய வருணஸ்யா பிசக்ஷேஸூர்யோ ரூபங்க்ருணுதே த்யோருபஸ்தே$^{2}$ | அனந்த மன்யத்$^{3}$ ருஸத$^{3}$ஸ்ய பாஜ: க்ருஷ்ண மன்யத்த$^{4}$ரிதஸ் ஸம்ப$^{4}$ரந்தி || அத்$^{3}$யா தே$^{3}$வ உதி$^{3}$தா ஸூர்யஸ்ய நிரம்ஹஸ: பிப்ருதா நிரவத்$^{3}$யாத் | தன்னோ மித்ரோ வருணோமா மஹந்தா மதி$^{3}$தி: ஸிந்து$^{4}$: ப்ருதி$^{2}$வீ உதத்$^{3}$யௌ: ||

*அவர் ஜீவித்திருக்கும் பாக்யம்பெற்ருல் நித்யம் நமஸ்கரி*

सविता पश्चातात्सविता पुरस्ता त्सवितोत्तरात्तात्सविताऽध
रात्तात् ॥ सविता नस्सुवतु सर्वतातिं सवितानोरासतां दिर्घमायुः ॥

ஸவிதாபஶ்சாதாத் ஸவிதா புரஸ்தாத் ஸவிதோத்த ராத்தாத் ஸவிதாऽத4 ராத்தாத் ॥ ஸவிதா நஸ்ஸுவது ஸர்வதாதிம் ஸவிதா நோராஸதாம் தீ3ர்க4மாயு: ॥

ஓம் ஶாந்தி: ஶாந்தி: ஶாந்தி:

जातवेदसे, पिशङ्गभृष्टिं, भद्रं कर्णेभिः, केश्या अग्निं ॥ इत्यादि समानम् ॥

ஜாதவேத3ஸே, பிஶங்கப்2ருஷ்டிம், ப4த்3ரம் கர்ணேபி4:, கேஶ்யா அக்னிம் ॥ (இவைகளை முன்னிருப்பதைப் போல் சொல்லவும்.)

மாலைவேளையில்—உபஸ்தா2னம் கரிஷ்யே ॥

उत्तमे शिखरे देवि……यतासुखम् ॥

உத்தமே ஶிக2ரே தேவி ……… யதாஸுகம் ॥

इमंमे, तत्वा, यच्चिद्धि, यत्किञ्च, कितवास इति मन्त्राणां शुनश्शेप वसिष्ठात्रय ऋषयः ॥ गायत्री, त्रिष्टुप्छन्दांसि ॥ वरुणो देवता ॥ सायं सन्ध्योपस्थाने विनियोगः ॥

இமம்மே, தத்வா, யச்சித்தி4, யத்கிஞ்ச, கிதவாஸ இதி மந்த்ராணாம் ஶுனஶ்ஶேப2 வஸிஷ்டாத்ரய ரிஷய: | என சிரஸ்ஸையும், கா3யத்ரீ, த்ரிஷ்டுப: ச2ந்தா3ம்ஸி | என நாசியையும், வருணோ தே3வதா | என மார்பையும், தொடவும். ஸாயம்ஸந்த்4யோபஸ்தா2னே விநியோக:3 ॥

इमं मे वरुण श्रुधी हव मद्याच मृळय । त्वामवस्युराचके ।
तत्वायामि ब्रह्मणा वन्दमानस्तदाशास्ते यजमानो हविर्भिः
अहेळमानो वरुणे हबोध्युरुशं समान आयुः प्रमोषीः ।
यच्चिद्धिते विशो यथा प्रदेव वरुणव्रतम् । मिनीमसिद्यविद्यवि
यत्किञ्चेदं वरुण दैव्येजनेऽभिद्रोहं मनुष्या श्चरामसि ।





अचित्ती यत्तव धर्मा युयोपिम मानस्तस्मादेनसो देवरीरिषः ।
कितवासोयद्रि रिपुर्नदीवि यद्वाघा सत्यमुतयन्न विद्म ।
सर्वाताविष्य शिथिरेवदेवा थातेस्याम वरुण प्रियासः ॥

இமம்மே வருணஶ்ருதீஹவமத்3யாசம்ருளய | த்வாம வஸ்யுராசகே | தத்வாயாமி ப்3ரஹ்மணா வந்த3மாநஸ்ததா3 ஶாஸ்தே யஜமானோ ஹவிர்பி1: | அஹேளமானோ வருணே ஹபோ3த்4யுரு ஶம்ஸமான ஆயு: ப்ரமோஷீ: | யச்சித்தி4 தேவிஶோயதா2 ப்ரதே3வ, வருணவ்ரதம் | மினீம ஸித்யவித்யவி யத்கிஞ்சேத3ம் வருண தை3வ்யே ஜனே பி4த்3ரோஹம் மனுஷ்யாஶ்சராமஸி அசித்தீ யத்தவத4ர் மாயுயோபிம மாநஸ் தஸ்மாதே3 நஸோ தே3வரீரிஷ: | கிதவா ஸோயத்3ரி ரிபுர்நதீ3வியத்3 வாகா4 ஸத்ய முத யன்னவித்ம | ஸர்வாதா விஷ்யஶிதி3 ரேவதே3 வாதா2 தேஸ்யாம வருணப்ரியாஸ: ॥

जातवेदसे, पिशङ्गभृष्टिं, भद्रंकर्णेभिः, केश्य अग्निं ॥ इत्यादिसमानम् ॥

ஜாதவேதஸே, பிஶங்கப்4ருஷ்டிம், ப4த்ரம் கர்ணேபி: | கேஶ்ய அக்னிம் ॥ முன்போலவே காண்க.

கீழ் கண்டதை மூன்று காலத்திலும் செய்யவும்.

सन्ध्यायै नमः । सावित्र्यै नमः । गायत्र्यै नमः । सरस्वत्यै नमः । सर्वाभ्यो देवताभ्यो नमो नमः ॥

ஸந்த்யாயை நம: | ஸாவித்ர்யை நம: | கா3யத்ர்யை நம: | ஸரஸ்வத்யை நம: ஸர்வாப்4யோதே3வதாப்4யோ நமோ நம: ॥

कामोकार्षीदिति महा मन्त्रस्य वामदेवऋषिः । गायत्रीछन्दः । परमात्मा देवता ॥ समस्तपाप क्षयार्थे जपे विनियोगः ॥

காமோகார்ஷீதி3தி4 மஹா மந்த்ரஸ்ய வாமதே4வ ரிஷி: | கா3யத்ரீ ச2ந்த: | பரமாத்மா தேவதா ॥ ஸமஸ்த பாப க்ஷயார்த்தே2 ஜபே விநியோக3. ॥

कामोकार्षीन्मन्युरकार्षीन्नमो नमः ॥

காமோ கார்ஷீன் மன்யுர கார்ஷீன் நமோ நம:

अभिवादये.........गोत्रः आश्वलायन सूत्रः.........शर्माना माहमस्मिभोः ॥

அபி4வாதயே.....................கோ3த்ர: ஆச்வலாயன ஸூத்ர:....................சர்மாநா மாஹமஸ்மிபோ4: ॥

प्राच्यै दिशे नमः । दक्षिणायै दिशे नमः । प्रतीच्यै दिशे नमः । उदीच्यै दिशे नमः । ऊर्ध्वाय नमः । अधराय नमः । अन्तरिक्षाय नमः । भूम्यै नमः । ब्रह्मणे नमः । यमाय नमः ॥

ப்ராச்யைதி3சே நம: | தக்ஷிணாயைதி3சே நம: | ப்ரதீச்யைதிசே நம: உதீ3ச்யைதி3சே நம: | ஊர்த்4வாய நம: | அத4ராய நம: | அந்தரிக்ஷாய நம: பூ4ம்யை நம: | ப்3ரஹ்மணே நம: | யமாய நம: ॥
தென் திசையை நோக்கிப்ப்ரார்த்திக்கவும்.

यमाय धर्मराजाय मृत्यवे चान्तकाय च । वैवस्वताय कालाय सर्वभूत क्षयाय च । औदुम्बराय दध्नाय नीलाय परमेष्ठिने । वृकोदराय चित्राय चित्रगुप्ताय वै नमः । चित्रगुप्ताय वै नम ॐ नम इति ॥

யமாய த4ர்மராஜாய ம்ருத்யவே சாந்தகாய ச | வைவஸ்வதாய காலாய ஸர்வ பூ4தக்ஷயாயச | ஔது3ம்பராய த3த்4னய நீலாய பரமேஷ்டி2னே | வ்ருகோத3ராய சித்ராய சித்ரகுப்தாய வை நம: | சித்ரகுப்தாய வை நம ஓம் நம இதி ॥
மேற்குத் திசையைப் பார்த்து:

ऋतꣳसत्यं परं ब्रह्म पुरुषं कृष्ण पिङ्गलम् ।
ऊर्ध्वरेतं विरूपाक्षं विश्वरूपाय वै नमो नमः ।
विश्वरूपाय वै नमो नमः ओं नम इति ॥

ரிதகும் ஸத்யம் பரம் ப்3ரஹ்ம புருஷம் க்ருஷ்ண பிங்களம் | ஊர்த்4வரேதம் விரூபாக்ஷம் விச்வரூபாயவை நமோ நம: ॥ விச்வ ரூபாயவை நமோ நம: ஓம் நம இதி ॥
வடக்குத் திசையைப் பார்த்து:

नर्मदायै नमः प्रातः नर्मदायै नमो निशि ।
नमोऽस्तु नर्मदेतुभ्य त्राहिमां विषसर्पतः ॥





நர்மதா3யை நம: ப்ராத: நர்மதா3யை நமோநிசி |
நமோऽஸ்து நர்மதே3 துப்4யம் த்ராஹிமாம் விஷஸர்பத: ॥
கிழக்குதிக்கைப் பார்த்து:

अपसर्प सर्प भद्रंते दूरं गच्छ महायशः ।
जनमेजयस्य यज्ञान्ते अस्तीक वचनं स्मरन् ॥
जरत्कारो जरत्कार्वां समुत्पन्नो महायशाः ।
अस्तीकस्सत्यसन्धो मां पन्नगेभ्योऽभि रक्षतु ॥
पन्नगेभ्योऽभिरक्षत्वों नम इति ॥

அபஸர்ப ஸர்ப ப4த்ர3ந்தே தூ3ரம் க3ச்ச2 மஹாயச: |
ஜனமே ஜயஸ்ய யஞாந்தே அஸ்தீக வசனம் ஸ்மரன் ॥
ஜரத்காரோர் ஜரத்கார்வாம் ஸமுத்பன்னோ மஹாயசா: |
அஸ்தீகஸ் ஸத்யஸந்தோ4மாம் பன்னகே3ப்ய: அபி4ரக்ஷது ॥
பன்னகே3ப்4யோ அபி4ரக்ஷது ஓம் நம இதி ॥

नमस्सवित्रे जगदेकचक्षुषे जगत्प्रसूति स्थितिनाश हेतवे ।
त्रयीमयाय त्रिगुणात्म धारिणे विरिञ्चि नारायण शङ्करात्मने ॥

நமஸ்ஸவித்ரே ஜக3தே3க சக்ஷுஷே ஜக3த்ப்ரஸூதி ஸ்தி2தி நாசஹேதவே | த்ரயீமயாய த்ரிகு3ணாத்மதா4ரிணே விரிஞ்சி நாராயண சங்கராத்மனே ॥

अजाय लोकत्रयपावनाय पूतात्मने गोपतये वृषाय ।
सूर्याय सर्ग प्रळयालयाय नमो महा कारुणिकोत्तमाय ।
विवस्वते ज्ञानभृदन्तरात्मने जगत्प्रदीपाय जगद्धितैषिणे ।
स्वयंभुवे दीप्तसहस्र चक्षुषे सुरोत्तमायामित तेजसे नमः ॥

அஜாய லோகத்ரய பாவனாய பூதாத்மனே கோ3பதயே வ்ருஷாய | ஸூர்யாய ஸர்க3 ப்ரளயாலயாய நமோ மஹா காருணிகோத்த மாய | விவஸ்வதே ஞான பி4ருத் அந்தராத்மனே ஜகத் ப்ரதீ3பாய ஜகத்3தி4தை ஷிணே | ஸ்வயம்பு3வே தீ3ப்தஸஹஸ்ர சக்ஷுஷே ஸுரோத்த மாயா மித தேஜஸே நம: ॥

ध्येयस्सदा सवितृमण्डल मध्यवर्ती नारायण स्सरसिजासन सन्निविष्टः । केयूरवान् मकरकुण्डलवान् किरीटी हारी हिरण्मय वपुःधृत शङ्खचक्रः ।

த்4யேயஸ் ஸதா3 ஸவித்ரு மண்ட3ல மத்4யவர்தீ நாராயண ஸ்ஸரஸிஜாஸந ஸன்னிவிஷ்ட: | கேயூரவான் மகர குண்டலவான் கிரீடீ ஹாரி ஹிரண்மயவபுர்த்4ருதஶங்க2 சக்ர: ||

शङ्खचक्र गदापाणे द्वारकानिलयाच्युत ।
गोविन्द पुण्डरीकाक्ष रक्षमां शरणागतम् ॥
आकाशात् पतितं तोयं यथागच्छति सागरम् ।
सर्वदेव नमस्कारः केशवं प्रतिगच्छति ॥
केशवं प्रतिगच्छत्योन्नम इति ॥

ஶங்க2 சக்ரக3தா3பாணே த்3வாரகா நிலயாச் யுத |
கோ3விந்த3 புண்டரீகாக்ஷ ரக்ஷமாம் ஶரணாக3தம் ||
ஆகாஶாத் பதிதம் தோயம் யதா2க3ச்ச2 திஸாக3ரம் |
ஸர்வதே3வ நமஸ்கார: கேஶவம் ப்ரதி கச்ச2தி ||
கேஶவம் ப்ரதி கச்சத் யோந் நமஇதி ||

अभिवादये............अस्मिभोः ॥
அபிவாத3யே..........அஸ்மிபோ:1 ||

प्रायश्चित्तान्यशेषाणि तपः कर्मात्मकानिवै ।
यानितेषामशेषाणां श्री कृष्णानुस्मरणं परं ॥ श्री कृष्ण कृष्ण कृष्ण ॥

ப்ராயஶ்சித்தான்ய ஶேஷாணி தப:கர்மாத் மகாநிவை |
யாநிதேஷாமஶேஷாணாம் ஸ்ரீக்ருஷ்ணனுஸ்மரணம்பரம் ||
ஸ்ரீ க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ||

कायेनवाचा मनसेन्द्रियैर्वा बुद्धयात्मनावा प्रकृतेः स्वभावात् ।
करोमियद्यत् सकलं परस्मै नारायणायेति समर्पयामि ॥

காயேனவாசா மநஸேந்த்3ரியைர்வா புத்4யாத்மனாவா ப்ரக்ருதே: ஸ்வபா4வாத் | கரோமியத்3 யத்ஸகலம் பரஸ்மை நாராயணாயேதி ஸமர்ப்பயாமி. ||

(என்று ப்ரஹ்மார்ப்பணம் செய்து ஜபம்செய்த விடத்தை ப்ரோக்ஷித்துத் தொட்டு மார்பில் வைத்துக்கொண்டு ஆசமனம் செய்யவேண்டும்.)

**ஆஶ்வலாயநீய ஸந்த்யாவந்தனம் முற்றிற்று.**

---

**விதிப்படி ஶ்ரத்தையுடன் தர்ப்பணம் செய்.**

# தைத்திரீய உபநிஷத்.

உபநிஷத் பகுதி.

**ப்ருகுவல்லி–10ம் அநுவாகம்.** (ஆனிமீ தொடர்ச்சி)

ப்ரஹ்மத்தை வேதமென்று உபாஸித்தால் ஸகல வேதங்களும் நிறைந்தவனாக இருப்பான். அத்த ப்ரஹ்மத்திற்கு நாலு புறங்களிலும் இருக்கின்ற யமரூபி என்று உபாஸித்தால் உபாஸகருக்கு நாலுபுறமுள்ள உபாஸகனை த்வேஷிக்கும் சத்ருக்கள் இறப்பார்கள். உபாஸகனை த்வேஷிக்காமல் இருக்கும் உபாஸகனுக்குப் பிடிக்காத சத்ருக்களும் இறப்பார்கள்.

स यश्चायं पुरुषे । य श्चासावादित्ये । स एकः । स य एवं वित् । असाल्लोकात्प्रेत्य । एतमन्नमयमात्मान मुपसंक्रम्य । एतं प्राणमयमात्मन मुपसंक्रम्य । एतं मनोमयमात्मान मुपसंक्रम्य । एतं विज्ञानमयमात्मान मुपसंक्रम्य । एतमानन्दमयमात्मान मुपसंक्रम्य । इमाल्लोकान्कामान्नी कामरूप्यनु संचरन् । एतत्साम-गायन्नास्ते ॥

**यः** எந்த **सोऽयं** அப்படிப்பட்ட இந்த பரமாத்மா **पुरुषे** ஜீவனிடத்திலிருக்கின்றானோ **यश्चासौ** எந்த இந்த பரமாத்மா **आदित्ये** ஆதித்யனிடத்தில் இருக்கின்றானோ **सः** அவன் **एकः** ஒருவனே **यः** எவன் **एवं वित्** இந்தமாதிரி அறிந்தானோ **सः** அவன் **अस्माल्लोकात्** இவ்வுலகத்தில் இருந்து **प्रेत्य** சென்று **अन्नमयं** அன்ன வடிவமான **आत्मानं** ஆத்மாவை **उपसंक्रम्य** அடைந்து **एतं प्राणमयं** இந்த ப்ராணமயமான

---

**ஆம்ராஶ்சதஸிக்தா ! பித்ரஶ்சத்ருப்தா! எனப்பழமொழி.**

**आत्मानं** ஆத்மாவை **उपसंक्रम्य** அடைந்து **एतं मनोमयमात्मनं** இந்த மனோமயமான ஆத்மாவை **उपसंक्रम्य** அடைந்து **एतं विज्ञानमयमात्मनं** இந்த விக்ஞானமயமான ஆத்மாவை **उपसंक्रम्य** அடைந்து **एतमानन्दमयमात्मनं** இந்த ஆனந்தமயமான ஆத்மாவை **उपसंक्रम्य** அடைந்து **कामान्नी** இச்சித்தவுடனே அன்னமுடையவனாக **कामरूपी** விரும்பிய உருவமுடையவனாக **इमान्लोकान्** இந்த லோகங்களை **अनुसंचरन्** அனுபவித்துக்கொண்டு **एतत् साम** இந்த ஸாமாவை **गायन्** பாடிக்கொண்டு **आस्ते** இருக்கிறான்.

முற்கூறிய உபாஸனைகளால் இப்பிறவியிலோ மறுபிறவியிலோ மனம் ஒருமைப்பட்டவனுக்கு அறியத்தக்க விஷயமும், அறிந்ததினாலுண்டாகும் பயனும் இங்கு கூறப்படுகிறது. முன்னே கூறப்பட்டிருந்தாலும் சித்தம் ஒருமைப்படுவதான தபஸ்ஸுக்கு பரம புருஷார்த்தங்களின் பயன் உண்டு என்று காட்ட மறுபடியும் கூறப்பட்டது. ஆனந்தமய கோஶத்தில் ப்ரஹ்மபுச்சம் எனக் கூறப்பட்ட அகண்டைக ரஸமான ஆனந்த ஆத்ம ஸ்வரூபத்தை ஸாக்ஷாத்கரித்ததால் ப்ரியம் மோதம் முதலிய கோசத்தின் அவயவங்களிலும் பந்தஹேதுவான முன் கூறப்பட்ட எல்லா கோஶங்களிலேயும் ஆத்மா என்ற புத்தி அடியோடு அகலவேண்டும் என்பதற்காக இது கூறப்பட்டுள்ளது. இத்தகையவன் உலகத்தவர் கண்ணிற்கு தேஹத்தோடு இருப்பதால் அவன் ஜீவித்திருக்கிறான் என்றும் தன்னைப் பற்றினவரையில் முக்தனாக இருப்பதாலும் அவன் ஜீவன் முக்தன் எனப்படுகிறான்.

உடல் அழியும்வரை மற்றவர்களைப் போலவே காணப்படுவான். விதி நிஷேதம் முதலியன இவனுக்கு இல்லை. ஆதலால் இஷ்டமான உருவத்தை எடுத்து இஷ்டமான அன்னத்தை புஜிப்பான். அன்னமயாதி கோசங்களைத் தாண்டி ஆத்மஸ்வரூபியாய் நிற்பான். ஆனந்தப் பரவசனாகி பின்னால் சொல்லப்போகும் ஸாமகானத்தைப் பாடுவான். ஆனந்தமுள்ளவரே ஆடிப்பாடுவர்.

---

**தர்ப்பணநீர், மாமரத்திற்கு ஜலம்பாய்ச்சுமளவுவேண்டும்**



**हा3 वु हा3 वु हा3 वु । अहमन्न महमन्न महमन्नम् । अहमन्नादोऽ3 हमन्नादोऽ3 हमन्नादः । अहꣳश्लोक कृदहꣳश्लोक कृद-हꣳ श्लोककृत् । अहमस्मि प्रथमजा ऋता3स्य । पूर्वं देवेभ्यो अमृ-तस्य ना3भायि । योमा ददातिस इदेवमा3ऽऽ-वाः । अहमन्नमन्न मदन्तमा3द्मि । अहं विश्वं भुवनमभ्य भवाम् । सुवर्नज्योतीः ॥**

हा3वु ஆஶ்சர்யம் हा3वु ஆஶ்சர்யம் हा3वु ஆஶ்சர்யம் **अहं** நான் **अन्नम्** அன்னம் **अहं** நான் **अन्नम्** அன்னம் **अहं** நான் **अन्नम्** அன்னம் **अहं** நான் **अन्नादः** அன்னத்தை உண்பவன். **अहं** நான் **अन्नादः** அன்னத்தை உண்பவன். **अहं** நான் **अन्नादः** அன்னத்தை உண்பவன். **अहं** நான் **श्लोककृत्** ஶ்லோகத்தைச் செய்தவன். **अहं** நான் **श्लोककृत्** ஶ்லோகத்தைச் செய்தவன். **अहं** நான் **श्लोककृत्** ஶ்லோகத்தைச் செய்தவன். **ऋतस्य** ப்ரும்மாவினிடமிருந்து **प्रथमजाः** முதலில் உண்டானவனாக **अहं** நான் **अस्मि** இருக்கிறேன். **देवेभ्यः** தேவர்களுக்கு **पूर्वं** முந்தியவனாக இருக்கிறேன். **अमृतस्य** மோக்ஷத்திற்கு **नाभाइ** ஆஶ்ரயமாக இருக்கிறேன். **यः** எவன் **मा** என்னை **ददाति** ஆத்மரூபியாகச் செய்கிறாரோ, **सः इत् एव** அவரே **मा** என்னை **अवाः** ரக்ஷிக்கின்றார். **अहम्** நான் **अन्नम्** அன்னத்தையும் **अन्नमदन्तम्** அன்னம் சாப்பிடுகின்றவனையும் **अद्मि** சாப்பிடுகிறேன். **अहं** நான் **विश्वं** ஸமஸ்தமான **भुवनं** உலகத்தை **अभ्यभवम्** மறைத்திருக்கிறேன். **सुवः न** ஸ்வர்க்கத்திலிருக்கிற சூர்யன்போல் **ज्योतीः** ப்ரகாசமுள்ளவனாக இருக்கிறேன்.

ஸந்தோஷமடைந்தவன் பாடுவதுபோல் ப்ரஹ்ம ஸ்வரூபியானவன் ஆனந்தத்தினால் ஸாமகானம் செய்வதாக

---

**தற்சமயம் ஜலத்திற்குப் பஞ்சம் ஏற்படவில்லை.**

உபநிஷத் கூறுகிறது. ப்ரம்மம் எங்கும் வ்யாபித்திருப்பதால் ப்ரஹ்ம க்ஞானியும் எல்லா ஸ்வரூபியாகிருன். முதலில் பந்தத்திலிருந்து விடுபட்டு ஆனந்த ஸ்வரூபத்தை அடைந்ததால் ஆஶ்சர்யம் என்று காட்ட அஹோ என்பது வேதத்தில் ஹா3வு என்று மாறி மும்முறை கூறப்படுகிறது. அதிஶயம் என்று காட்டுவதற்காகவும் ஸத்யம் என்று காட்டுவதற்காகவும் மும்முறை கூறுவது வழக்கம். நானே சாப்பிடத்தக்க வஸ்துவாகவும் சாப்பிடுகின்றவனுகவும் ஶ்லோகத்தைச் செய்பவனுகவும் ஹிரண்யகர்ப்பனுகவும் தேவர்கள் உண்டாவதற்கு முன் இருப்பவனுகவும் அம்ருதத்திற்கு ஆஶ்ரயமாகவும் அன்னமாகவும் அன்னமுண்பவனுகவும் உலகையெலாம் வ்யாபித்திருப்பவனுகவும் சூர்யன்போல் ப்ரகாசமுள்ளவனுகவுமிருக்கிறேன்.

(3 = மூன்று மாத்ரா காலம்.)

**य एवं वेद । इत्युपनिषत् ॥**

**यः** எவன் **एवम्** இவ்வாறு **वेद** அறிகிருனே **इति** என்று **उपनिषत्** ப்ரஹ்மவித்யையை.

யார் அன்னமயாதி கோஶங்களைக்கடந்து ஆனந்தமய ஸ்வரூபியாகத் தன்னை அறிகிருனே அவன் ப்ரும்மஸ்வரூபியாக ஆகிருன் என்று ப்ருகுவினுல் சொல்லப்பட்ட ப்ரும்மவித்யையாகும்.

**सह नाववतु । सहनौ भुनक्तु । सहवीर्यं करवावहै । तेजस्विना वधीतमस्तु मा विद्विषावहै । ॐ शान्तिः शान्तिः शान्तिः ॥**

இதற்கு அர்த்தம் முன் கூறப்பட்டிருக்கிறது.

***தைத்திரீய உபநிஷத் மூன்ரும் ப்ரஶ்னம் முற்றிற்று.***

[9வது ஆண்டில் ஒன்பதாவது மாதத்திலாரம்பித்த இவ்வுபநிஷத் 12-வது வருஷம் 12-வது மாதத்துடன் முடிவடைந்தது.

**हरिः ओम्** ஹரி: ஓம்.

---

***ஒரு பஞ்சபாத்திர ஜலம் போதாது. நிறைய செய்க.***



# பிணி பொறுத்தல்.

ஸத்கதாம்ருத கலாநிதி, ஸ்ரீ T. S. பாலகிருஷ்ணசாஸ்த்ரி.

"அரிசி விலை ஏறிக்கொண்டே போகிறதாம்! முன்னைப்போல் ஸுமுகமாக அக்ஷதை போடுகிறவர்கள் இல்லை" என்று ஏங்கினுர் உபாதானம் வாங்கி ஜீவிக்கும் ஓர் ஏழை பிரும்மணர்.

"அரிசி ஒன்றுதானு விலை ஏறி இருக்கிறது? 'ராமா, ராமா' என்றிருக்கிற உமக்கு இந்தக் கஷ்டம் எங்கே ஐயா தெரியப்போகிறது?" என்ருர் ஒரு குடும்பி.

"மற்றது எப்படிப் போனுல் என்ன ஸ்வாமி? என்போன்ற ஏழைக்கு ஒருவேளை வெற்று சோற்றுக்குக் கூட கஷ்டம் வந்தால் எப்படிக் காலம் தள்ளுவது?" என்ருர் பாகவதர்.

"அந்த ராமனையே கேளுமே! கேட்டு பசிக்காதவரம் உமக்கும் எனக்கும் சேர்த்து வாங்கிக்கொள்ளும்" என்ருர் அந்தக்குறும்புக்கார குடும்பி. கீழ்வரும் கிர்த்தனையைப் பார்ப்போம்.

**ராகம் - பவப்ரியா]** பல்லவி. **[தாளம் - தேசாதி.**

**ஸ்ரீ காந்த நீயெட பலாதி பல**
**செல கங்க லேதா வாதா — (ஸ்ரீ)**

***அனுபல்லவி.***

**பாகாரி நுத நீ வாரி பலா**
**பலமுன தெலிய லேதா — (ஸ்ரீ)**

***சரணம்.***

**காக தைத்யு நேக சரமுன னேய**
**கஞ்ஜ ஜாஸ்த்ரமை பரக$^{3}$ லேதா**
**ஸ்ரீகர த்விஜுலை த$^{3}$ாரி நெறுக லேனி**
**சிந்த நீகு தோச தேமி த்யாக ராஜ நுத — (ஸ்ரீ)**

**பொருள்:**—லக்ஷ்மி நாயகனுன ஸ்ரீராமா! உம்மிடத்தில் பலை, அதிபலை என்ற இரு மந்திரங்கள் பிரகாசிக்க

---

***இதில் காருண்ய பித்ருக்களும் வருகின்றனர்.***

வில்லையா ? (பாகாரி) தேவேந்திரனால் கொண்டாடப் பட்ட தங்களுக்கு, தங்களைச் சேர்ந்தவர்களுடைய பலமும், பலமின்மையும் தெரியாமல் போனதா ?

காகாஸுரன் மீது ஒரே பாணம் விட, அது (கஞ்ஜஜ) பிரும்மாவின் அஸ்த்ரமாக மாறவில்லையா ? (இக்கலியில்) பிரும்மணர்கள் வழி அறியாமல் இருக்கிறார்கள் என்ற கவலை தங்களுக்கு ஏன் தோன்றவில்லை ? தியாகராஜனால் துதிக்கப்படும் ஸ்ரீகர ! தங்களுக்கு இது விஷயத்தில் என்ன தடை ?

**தாத்பர்யம்:— பலாதிபலா:—** கௌசிக முனிவர், ஸ்ரீராம லக்ஷ்மணர்களை தம் வேள்வியைக் காக்க ஸித்தாச்ரமம் அழைத்துச் செல்லும்பொழுது, சிறுவர்களுக்கு வழியில் பசி தாகம் சோர்வு முதலியவை ஏற்படாமலிருக்கநினைத்து 'பலே, அதிபலே' என்ற இரு மந்திரங்களை உபதேசித்தார். இருவரும் அதை சிரத்தையுடன் ஏற்று அப்யஸித்தார்கள். இக் காட்சியை மனதில் கொண்ட ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகள் அதை விசேஷித்து 'பலாதிபல செல கங்க லேதா' என்று தெரிவிக்கிறார்; அதாவது, 'பலே, அதிபலே' உம்மிடம் பிரகாசித்தன அல்லவா ! ராமா, ''நீர் பரமாத்மா ! உமக்குப் பசி, தாகம், களைப்பு இவைகள் ஏது ? மனுஷ்யனாக நடிக்க வந்திருக்கிறீர் ! இதை அறிந்த கௌசிகரும் உமக்குத் தயங்காமல் இவைகளை உபதேசிக்கக் கடமைப்பட்டார். நீரும் வினயமுடன் ஸாமான்யரைப்போல ஏற்றீர். உம்மை இன்னார் என்றறிந்து அந்த மந்த்ர தேவதைகள் உம்மால் அழைக்கப்பட்டு, உம்மிடம் சேர்தலால் இன்னும் அதிகமாக ப்ரகாசித்தன'' என்றார்.

மேலும் 'பலாதிபலா' என்றதில் மற்றொரு பொருளும் ஏற்கத் தகும். ''ஸ்ரீ ராமா உம்மிடம் (அப்ரமேய பௌருஷ) பலமும், (தர்ம ஸத்ய வ்ரத) அதிபலமும் காணப்படுகின்றன. அதில் க்ஷத்ரியர்களுக்கு மேலான தர்மமான 'ஆந்ரு ஶம்ஸ்யம்' என்ற கருணைகூர் மன்னிப்பு உம்மிடமுள்ள அதிபல ரஹஸ்யமாகப் பிரகாசிக்கிறது.''

''இவ்வாறிருக்க, உம்மை நினைந்திருப்பவர்களின் ('ராமா' என்ற நாமஸ்மரணம் அன்றி வேறொன்றும்

**அமாவாஸ்யையில் பித்ரு மாதாமஹ வர்க்கங்களே.**



செய்ய அறியாதவர்களின்) பலமும், பலமின்மையும் உமக்குத் தெரியாமல் போனதா ?''

''முன்பு காக்கை ரூபத்தில் வந்தான் அஸுரகுணத்துடன் இந்திர குமாரன். ஸீதாதேவியைத் துன்புறுத்தினான். அதைக்கண்ட தாங்கள் அடங்காத சினம்கொண்டீர். அந்த அற்பன் மீது ஒரு புல்லை ஏவினீர். அது ப்ரும்மாஸ்தர மாகியது. உம்மை அண்டியிருக்கும் தேவியைத் துயரப்படுத்தின இந்த துஷ்டன் காக்கைதானே என்றிராமல் அவனுக்குப் பிரும்மாஸ்திரம் பிரயோகம் செய்தீர். பயந்து ஓடின அந்தக் காக்கையைக் காப்பவர் மூவுலகிலும் இல்லாததால், அது உம்மையே முடிவில் சரண் அடைந்தது. தயவும் இரக்கமும் உமக்கு அதனிடம் உடனே பிறந்தது. அதை மன்னித்து உயிர்ப் பிச்சை அளித்தீர். உம்மிடம் தோன்றின அடல்சினமும், அதன் விளைவான அதிபலமும், ஸஹஜமான உம் கருணை வெள்ளத்தாலே சாந்தமடைந்து அதி கிருபையாக மலர்ந்தது. இதுவொன்றே எங்களுக்குப் போதுமான சான்று.''

''இப்பொழுதும் உம்மை ஒன்று கேட்கிறேன். ஒரு பக்ஷிக்காக (த்விஜம்) இரங்கிய தாங்கள் இக் கலியில் த்விஜர்கள் (இருபிறப்பாளர்கள்) ஸன்மார்க்கம் பிசகி மயங்குகிறார்கள். அவர்களை வழிமறுத்து எதிர்க்க ஆறு (ஊர்மிகள்) அலைகள் எப்பொழுதும் பலமாக அடிக்கின்றன. பசி, தாகம், சோகம், மோகம், ஜனனம், மரணம் என்பவை அந்த ஆறு அலைகள். உம்மை உபாஸிக்க வேறு வழிகள் தெரியாதவர்களேயாயினும் 'ராமா, ராமா' என்று அறிந்தோ அறியாமலோ சொல்லுகிறார்கள். இவர்களை ஸன்மார்க்கத்தில் செலுத்தி, உமது திருவுளத்திற்கு உசிதம்போல் ரக்ஷிக்க வேண்டாமா ? இதில் ஏதேனும் ஆக்ஷேபம் உண்டா ''?

[இக் கீர்த்தனத்தின் மூலம் தியாகராஜஸ்வாமிகள் தன்னையே பகவானுக்கு அறிவிக்கிறார் என்பது பாவம். அக்காலத்தில் பிரும்மணர்களில் சிலர் பாஷண்டர்களாக இருந்ததை ஸ்வாமிகள் அறிந்து வருந்தி ஸ்ரீராமபிரானிடம் முறையிட்டார் என்றும் கொள்வார்.]

**கயை பிண்டம்போல் எல்லோருக்கு மிங்கு தர்ப்பணம்.**

# குமதி ஸௌமதி ஸம்வாதம்.

மாதர் பகுதி.

**குமதி :** நாம் இருபதாம் நூற்றாண்டில் இருக்கின்றோம். நீ, க்ருத யுகத்து ஸ்த்ரீபோல் தர்மங்களைக் கொண்டாட வேண்டும் என்கின்றாய், அது இக்காலத்திற்கு ஏற்றதா ?

**ஸௌமதி :** முற்கால தர்மத்தை எல்லாவற்றையும் கைக்கொள்ளவும் முடியாது. எல்லாவற்றையும் விடவும் முடியாது. அதே போல் இக்காலத்தில் தோன்றும் எல்லாவற்றையும் அடியோடு கொள்ளவும் முடியாது. தள்ளவும் முடியாது.

**கு :** இப்பொழுது நீ சொல்வது ரொம்ப ந்யாயமாக இருக்கிறது! ஒன்று கேட்கிறேன். முக்காலம்போல் நாம் பதினெட்டு முழம் புடவை கட்டவேண்டுமா? அதிலும் தென்னாட்டவர் போல் கச்சம்வைத்து (மடிசார் புடவையாக) கட்டவேண்டியது அவச்யம்தானா ?

**ஸௌ :** அது ரொம்ப அவச்யம்தான் ! வைதிக கர்மாக்கள் செய்ய அப்படித்தான் இருக்கவேண்டும்.

**கு :** தென் தேசத்தில் உள்ள சில வகுப்பு ஸ்த்ரீகளைத் தவிர ஆந்திரர் முதலிய வடதேச வைதிக ஸ்த்ரீகளும் இப்படிக் கட்டுவதில்லையே ?

**ஸௌ :** இதுதான் தேசாசாரம் ! ஜாத்யாசாரம் ! எனப்படுவது. அந்தந்த தேசத்திலிருந்த ரிஷிகள் அந்தந்த ஜாதிக்கு ஏற்ற ஆசாரங்களைக் கற்பித்தனர். அதையதை அவரவர்கள் கைப்பற்றுதல் வேண்டும்.

**கு :** ஒரு தேசத்தில் ஒருவரால் ஆசாரம் எனக் கொள்ளப்படுவதை மற்றவர் ஏன் அதை ஆசாரமாகக் கொள்ளலாகாது?

**ஸௌ :** அந்தந்த தேசத்தில் கூறியது அந்தந்த தேசத்திற்கே ஏற்றது. வடதேசத்து ஸ்த்ரீகளைப்போல் நம் தேசத்து ஸௌமங்கலிகள் தலையில் முக்காடு போட்டுக்கொள்வது போன்ற ஆசாரத்தை ஏற்கலாகாது. நம்மைப்போன்ற (மடிசார்ப் புடவை) அவர்களுக்குக் கூடாதுதான்.

**கு :** கூடாது என்பது ஒரு சட்டம்போல் கூறுகிறாயே ! ஏன் கூடாது ? என்ற கேள்விக்குக் கோபித்துக்கொள்ளாமல் சாந்தமாகப் பதில் கூறு, கேட்போம்.

**ஸகல தர்பணங்களையும் விளக்குவது 10 அ. தபால் த. 2 அ.**



**ஸௌ :** ப்ரத்யக்ஷமாகத் தெரியாததும், நமது புத்திக்கு எட்டாததுமான விஷயத்தில் பெரியோர்கள் கூறுவது நமது நன்மைக்காகத்தான் எனக் கருதவேண்டும். அதில் ஏதேனும் தத்வம் இருக்கும் என நம்பித்தான் அதை அனுஷ்டிக்க வேண்டும். மத்வர், ராமானுஜர், ஶங்கரர் என்ற மூன்று மத ஆசார்யர்களும் தோன்றியது தென்னாடு. இம் மூன்று மத ஸ்த்ரீகள் சிறிது மாறுதல் இருந்தாலும் கச்சத்துடனேயே கட்டுகின்றார்கள். இங்கிருந்து ஆந்த்ரதேசம் சென்ற புதூர் திராவிடர் என்ற ஆந்திரர்களும் விவாஹம் ச்ராத்தம் முதலிய காலங்களில் கச்சம் அணிகிறார்கள்.

**கு :** அப்படியானால், நாமும் வைதிக கார்யத்தில் மாத்திரம் கச்சம் கட்டிக்கொண்டு மற்ற ஸமயத்தில் மாம்பழப் புடவை கட்டலாமே ?

**ஸௌ :** கச்சம் கட்டுவதில் என்ன உனக்கு அவ்வளவு கஷ்டம் ?

**கு :** 18 முழத்தைத் தூக்கிக் கட்டிச் சுமக்கவேண்டும்! அதைக் கட்ட ரொம்ப நேரமுமாகிறது !

**ஸௌ :** 10 முழம் புடவை கட்டுபவரும், 8 முழம் உள்ளே ஒரு பாவாடையாகக் கட்டவில்லையா ? சுமக்க முடியவில்லை என்பது வீணான வாதம்! ட்ரஸ் பண்ணிக்கிறது என எத்தனை நாழி வீணாகக் கழிக்கப்படுகிறது ?

**கு :** இருக்கட்டும், அதென்ன 18 முழம் விசேஷம் ?

**ஸௌ :** அது தெரியாதா ? 18 என்பது சுபத்தை அளிக்கும் எண்! ஜய எண் 18-க்குப் பெயர்! பாஷை 18, ஜாதி 18, வாத்யம் 18, பாரதப் பர்வா 18, பாரத யுத்தம் 18 நாள், 18 அக்ஷௌஹிணி சேனை, 18 அத்யாயம் கீதை, 18 வித்யை 18 ஸ்மிருதி, 18 புராணம், 18 ஆகமம், 18படி ஐயப்பன், 18 வாத்திமக்ராமம். இப்படி அதன்விசேஷத்தை யறிந்துதான் 18, 18 ஆக ஏற்படுத்தினர் முன்னோர் !

**கு :** புருஷாளுக் கில்லையோ அந்த 18 முழம் ? நமக்குத்தானா?

**ஸௌ :** எதற்கு எடுத்தாலும் புருஷாளுடன் போட்டியா ? அவர்களுக்கும் 12 + 6 = 18 முழம் தாராளமாக உண்டு ! அது 9 + 5 ஆனது ! எப்போதும் அவர்களுக்கும் கச்சமுண்டு ! கச்சமில்லாமல் செய்யும் ஸகல கர்மாவும் வீணாகும் ! யார் செய்தாலும் தப்பு தப்புதான் !

**நவராத்ரியில் அன்னையை ஆதரவுடன் பூஜை செய்.**

கு : சில வைதிகர் மாத்ரம்தானே பஞ்சகச்சம் கட்டுகின்றனர்! மற்றவர் தட்டாடை, ஸூட் தரிக்கிறார்களே

ஸா : சொன்னால் உனக்குக் கோபம் வருகிறது! வெளியிலே வேலைக்குப் போகிற புருஷாள் அந்தந்த அதிகாரிகளைப் பார்த்துவர உத்யோக நிமித்தம் ஸூட் போடுகிறார்கள்! அதிலும் எத்தனையோபேர் கச்சமணிகின்றனர்! அதற்காக, ஸ்த்ரீகளும் ஸூட் போடுவதா?

கு : ஸமயம் வந்தால் எல்லாம்தான் வேண்டும்! மிலிடிரியில் சேர்ந்தால் மடிசார் உதவுமா?

ஸா : பேஷ்! காலில் நிஜார், பூட்ஸ், தலையில் தொப்பியா?

கு : நாய் வேஷம் போட்டால் குலைக்கத்தானே வேண்டும்?

ஸா : உத்யோக நிமித்தந்தானே வேஷம்! அந்த வேஷத்தைத் தரித்து புருஷாள் ஆடிப்பாடித் தேடிப்போட்டால் நன்றாக நிழலில் உட்கார்ந்து சாப்பிடுவதை விட்டு எதற்கு நமக்கு இந்த வீண் துன்பம்?

கு : என்ன இருந்தாலும் உத்யோகம் புருஷலக்ஷணமில்லையா?

ஸா : புருஷ லக்ஷணந்தானே? ஸ்த்ரீ லக்ஷணமில்லையே? ஸம்பாதித்துத்தான் சாப்பிடவேண்டுமென்று தலை எழுத்திருந்தால்கூட உட்கார்ந்த இடத்திலிருந்தே தையல், ஸங்கீதம், வைத்யம், கவர் ஒட்டுவதுபோன்ற வேலை இருக்கே!

கு : உனக்கென்ன அத்தனை பிடிவாதம்? பெண்கள் உத்யோகத்திற்குப் போகக் கூடாதென்று!

ஸா : பிடிவாதமென்ன? கஷ்டம் என்றுதான் கூறுகிறேன்! மெல்லிய உடல், 18 முழம் புடவை கட்டி, உடலை மூடி— உடலை, கற்பை, தேசத்தை, குலத்தை, குழந்தைகளைக்—காக்கவேண்டுமென்றுதான் சொல்கிறேன்!

கு : கௌஸபதி, கார்க்கி, மைத்ரேயீ போன்றவர் எவ்வளவு படித்து புருஷர்களுக்குமேல் வாதம் செய்தனர்?

ஸா : நீயும் அந்த மாதிரி படிப்பு படி! வாதம் பண்ண கௌஸ பதி போன்ற நிலை உனக்கு வேண்டாம்! இவ்வளவு ஸ்த்ரீ ரத்நங்களைக் கூறினாயே! இதில் யாராவது எங்காவது உத்யோகம் செய்ததாகக் காணப்படுகிறதா? மத்தியஸ்தமாக (ஜட்ஜாக) வைத்த உபயபாரதி கூட ஸபைக்கு வராமலே தீர்ப்பு சொன்னாள்.

---

**துர்கையாகி துக்கத்தை அகற்றுகிறாள் அன்னை.**

# ஆயுர் வேதம் (11)

வைத்தியப் பகுதி.

Dr. V. K. வெங்கிடசாமி, M. B., B. S., F. I. M.,
1/3, A. D'Sylva Road, Mylapore, Madras-4.

***பித்த தோஷம் :-*** (1) சிந்தல் கொடி, வெட்டிவேர், விலாமிச்சவேர், வில்வவேர், பற்பாடகம், ஆடாதொடை, நிலவேம்பு, கோரைக் கிழங்கு, சந்தனத் தூள், வட்டத் திருப்பி, அதிவிடயம், சுக்கு, கொத்தமல்லி, வெட்பாலை அரிசி சமயிடை, கஷாயம் 1–2 அவு. தேனுடன் தினம் மும்முறை. (2) அதிவிடயம், வில்வவேர், குடசப்பாலைப் பட்டை, வெட்டிவேர், கோரைக் கிழங்கு சமயிடை, கஷாயம் 1–2 அவு. தினமிருமுறை. ***கபதோஷம்:-*** (1) ஹிங்வாஷ்டக சூரணம் (பெருங்காயம் இதைப் பொரிக்க வேண்டும், இந்துப்பு, சீரகம், கருஞ்சீரகம், சுக்கு, மிளகு, திப்பிலி, ஓமம் ஒவ்வொன்றும் 12) 10–30 கிர. ஆகாரத்துடன் வெந்நீரிலாவது புளித்த மோரிலாவது தினம் இருமுறை. (2) தாளிச்சாதி சூர்ணம் (தாளிச்சபத்திரி 1, மிளகு 2, சுக்கு 3, திப்பிலி 4, மோடி 5, லவங்கப் பட்டை $\frac{1}{2}$, ஏலம் $\frac{1}{2}$, சீனா கற்கண்டு 40) 10–30 கிர. தேனுடன் அல்லது வெந்நீரில் தினம் மும்முறை. (3) கர்ப்பூராதி சூர்ணம் (பச்சைக் கர்ப்பூரம், தக்கோலம், ஜாதிக்காய், லவங்கப்பத்திரி, ஜடாமாசி இவை ஒவ்வொன்றும் 1, லவங்கம் 2, சிறுநாகப்பூ 3, மிளகு 4, திப்பிலி 5, சுக்கு 6, கற்கண்டு 25) 30–60 கிர. வெந்நீருடன் தினம் இருமுறை.

***சீதபேதியில் உபயோகமாகும் முறைகள்:-*** (1) மாங்கொட்டை, வெந்தியம், கருவேப்பிலை, மாதுளம் பழத் தோல், சுண்டைக்காய்வற்றல் சமயிடை $\frac{1}{4}$ பலம் அளவில் எருமைத் தயிருடன் தினமிருமுறை. (2) கடுக்காய்ப் பூ, லவங்கப்பட்டை, லவங்கம் ஒவ்வொன்றும் 1 விராகனிடை தூள்செய்து 6 பாகமாக்கி பசும் வெண்ணையுடன் தினம் மும்முறை. (3) உலர்த்திப் பொடிசெய்த வில்வப்பழம் 12 கிர., அதிமதுரம் 2 கிர., லவங்கப்பட்டை 1 கிர.

---

**லக்ஷ்மியாகி செல்வத்தைத் தருகிறாள் பக்தருக்கு.**

15 கிர. தினமிருமுறை. (4) ஸ்பகோல் விதை, சோம்பு, வில்வப்பழம் (உலர்த்திப் பொடிசெய்தது) சமயிடை ½-1 டீ ஸ்பூன் தினமிருமுறை. (5) குடஜாரிஷ்டம் ½-1 அவு. தினமிருமுறை. **குறிப்பு** :- இரத்தம் அதிகம் போனால், சால்மலி (வேலம்பிசின்) 15 கிர., லாக்ஷா (கொம்பரக்கு) 15 கிர. சேர்த்துக் கொடுக்கவும்.

**விஷூசி என்ற பேதியில்**:-(1) மிளகாய் விதை (வறுத்தது) கஷாயம் 1 அவு. 4 மணிக்கொருதரம் தரவும். (2) கர்பூராரிஷ்டம் ½ அவு. 4 மணிக்கொருதரம் கொடுக்கவும். ஜாதிபலாதி சூர்ணம், சாயில்யாதி மாத்திரை, அஷ்டாக்ஷரி குளிகை போன்ற மருந்துகள் விஷூசியிலும், பேதி அதிகமாகும் போதும் உபயோகப்படும். ஆனால் இவைகளில் மயக்கமுண்டாக்கும் அபினி, கஞ்சா மருந்துகள் சேர்ந்திருப்பதால் வைத்தியர் மூலம் எடுத்துக் கொள்ளவேண்டும்.

கிரஹணியில் (1) முற்கூறிய பாசன (ஜீரண) சூர்ணங்களையோ கஷாயங்களையோ முதலில் உபயோகிக்க வேண்டும். (2) திப்பிலி சூர்ணம் (3) அல்லது திரிகடு சூர்ணம் 30 கிர. தினம் மும்முறை வெந்நீரில். (4) பாஸ்கர லவணம் 20 கிர. தினமிருமுறை. (5) ஜம்பீர ஸ்வரஸம் அல்லது (6) இஞ்சி ஸ்வரஸம் ½ அவு. தினம் மும்முறை கொடுக்கவும். (7) கொஞ்சம் பேதிநின்று ஜீரணம் அதிகமானதும் ரத்த விருத்தி மருந்துகள் தேவை. லேகாஸவம் ½ அவு. அல்லது மண்டூர பஸ்பம் 5 கிர. தேனில். அல்லது ஸௌராக்ஷாரகாஸீஸம் 5 கிர. தேனில், தினமிருமுறை உணவிற்குப் பிறகு உட்கொள்ளவும். (7) இத்துடன் ஜீரணத்தை விருத்திசெய்து மலத்தைக் கட்ட வில்வாதி லேஹ்யம் ½ தோலா தினமிருமுறை சாப்பிடவும். (வில்வ வேர் 32 பலம் 8 படி ஜலத்திலிட்டு 2 படியாகக் காய்ச்சி வடிகட்டி 32 பலம் சர்க்கரைச் சேர்த்து பாகு செய்து, சுக்கு, மிளகு, திப்பிலி, சிறுநாகப்பூ, சீரகம், கொத்துமல்லி, கருவாப்பட்டை, கோரைக்கிழங்கு, ஏலம் ஒவ்வொன்றும் 3 பலம், நெய் 20 பலம் சேர்த்து லேஹ்யம்கிளறி ஆறினவுடன் தேன் 10 பலம் கூட்டவும்)





## சாந்தி விலாஸம்.

( ஸ்ரீ தீ. ரா. கணபதி தீக்ஷிதர்.)

46. सम्यङ्मुक्तास्त्रिभिरपि मलैश्चिद्विकासैकरूपाः
त्वन्निध्यान प्रवणमनसः सूरयस्त्वत्पुरे ये ।
तेषां सन्दर्शयितुमपरिज्ञातपूर्वं कदाचित्
जन्तुं मुग्धं शिवनयसि किं विश्वपारं पुरंमाम् ॥

ஸம்யங்முக்தாஸ் த்ரிபி$^{4}$ரபி மலைஶ்சித்$^{3}$விகாஸைகரூபா:
த்வந்நித்யான ப்ரவணமனஸ: ஸூரயஸ்த்வத்புரே யே |
தேஷாம்ஸந்த$^{3}$ர்ஶயிதுமபரிஞாத பூர்வம் கதா$^{3}$சித்
ஜந்தும் முக்த$^{4}$ம்ஶிவ நயஸிகிம் விஶ்வபாரம் புரம்மாம் ||

ஓ பரமசிவ! ஸகல உலகங்களுக்கும் மேலான உமது உலகில், மும்மலமகற்றி, ஸதா தங்களையே த்யானம் செய்பவர்களும் ஸ்வப்ரகாஶமானவர்களுமான முக்தர்கள் வஸிக்கிறார்கள். அவர்கள், எங்களைப்போன்ற பாபிகளைப் பார்த்திருக்கவே மாட்டார்கள். அவர்களுக்கு என்னைக் காட்டுவதற்காகவாவது தாங்கள் ஒரு ஸமயம் அங்கு அழைத்துச் செல்வீரா?

தாங்களே தயைசெய்தால்தான் நாங்கள் கைலாஸம் வரலாம்.

47. दिष्ट्यालब्धं द्विजवरकुले जन्म तत्रापिदिष्ट्या
धर्माधर्मस्थिति रवगतैव प्रसादाद्गुरूणाम् ।
जन्मन्यस्मिन्नपियदि न मे सम्भवेदास्तिकत्वं
निस्तारः किं निरयभवनात्सर्वमोक्षेऽपिलभ्यः ॥

தி$^{3}$ஷ்ட்யா லப்$^{3}$த$^{4}$ம் த்$^{3}$விஜவரகுலே ஜன்ம தத்ராபி தி$^{3}$ஷ்ட்யா த$^{4}$ர்மாத$^{4}$ர்ம ஸ்தி$^{2}$தி ரவக$^{3}$தைவ ப்ரஸாதா$^{3}$த்$^{3}$ கு$^{3}$ரூணாம் | ஜன்மன்யஸ்மின்னபியதி$^{3}$ நமே ஸம்ப$^{4}$வேத$^{3}$ாஸ்திகத்வம் நிஸ்தார:கிம் நிரயபவநாத் ஸர்வ மோக்ஷேபி லப்$^{4}$ய: ||

தெய்வச்செயலாக சிறந்த பிராம்மண குலத்தில் பிறவி கிடைத்தது. அதிலும் குருவின் அருளால் தர்ம அதர்மங்கள், ஸ்திதி இன்னதென்று தெரிந்தது. இப்பிறவியிலுங்கூட ஆஸ்திக

தத்வம் உண்டாகாவிடில் எல்லோருக்கும் விடுதலை ஏற்பட்டாலும் எனக்கு நரகத்திலிருந்து விடுதலை உண்டாகுமா? நற்குலத்தில் உதித்தவர் நாஸ்திகராஞல் அவருக்கு நரகமே இருப்பிடமாகும்.

48\. भव्येदेहे पटुषु करणेष्वालये श्रीसमृद्धे
कौमारान्ते वयसि कथमप्यप्रवृत्ते च दुःखे ।
प्रत्यक्पुष्पी प्रसवविधया यस्य पुंसो निसर्गात्
प्रत्यग्वक्त्रं भवतिहृदयं कस्ततोप्यस्ति धन्यः ॥

ப$^4$வ்யேதே$^3$ஹே படுஷுகரணேஷ் வாலயே ஸ்ரீஸம்ருத்$^3$தே$^1$
கௌமாராந்தே வயஸிகத$^2$ மப்ய ப்ரவ்ருத்தேசது$^3$:கே$^2$ ।
ப்ரத்யக்புஷ்பீ ப்ரஸவவித$^1$யா யஸ்யபும்ஸோ நிஸர்க$^3$ாத்
ப்ரத்யக்$^3$வக்த்ரம் ப$^4$வதிஹ்ருதயம் கஸ்ததோப்யஸ்திதந்ய: ॥

உடல் நன்ருக இருக்க இந்த்ரியங்கள் சக்திஉள்ளதாக இருக்க வீட்டிலும் செல்வம் நிறைந்திருக்க யௌவன காலத்தில் யாதொரு துக்கமும் இல்லாதபோது எவனுடைய ஹ்ருதயம் நாயுருவி புஷ்பம் போல் வெளிவிஷயத்தை விட்டு உள்நோக்கி இருந்தால் அவனே மிகச் சிறந்தவனுவான்.

ஸகல ஸம்ருத்தியுமிருக்கும்போதே பக்தி செய்.

49\. नाहंयाचे पदमुडुपते र्नाधिकारं मघोनः
नापिब्राह्मीं भुवनगुरुतां काकथाऽन्य प्रपञ्चे ।
अन्यस्यान्यः श्रियमभिलषन्नस्तु कस्तस्यलोकः
मह्यं शम्भो दिश मसृणितं मामका नन्दमेव ॥

நாஹம்யாசே பத$^3$முடு$^3$பதேர் நாதி$^4$காரம் மகோந:
நாபிப்$^3$ராஹ்மீம் பு$^4$வநகு$^3$ருதாம் காகதாந்ய ப்ரபஞ்சே ।
அந்யஸ்யாந்ய: ஶ்ரியமபி$^4$லஷன் நஸ்துகஸ்தஸ்யலோக:
மஹ்யம் ஶம்பே$^4$ா தி$^3$ஶ மஸ்ருணிதம் மாமகாநந்தமேவ ॥

ஓ பரமசிவனே! தங்களை யான் சந்த்ரலோகம் இந்த்ரலோகம் ப்ரும்ம பதவிகளையே கொடுமென வேண்டவில்லை. மற்ற லோகங்களைப் பற்றிக் கேட்பானேன்? யார்யாருடைய லோகத்தை வேண்டுமாஞலும் வேண்டட்டும். நீங்களும் அளியுங்கள். எனக்கு என்னிடமுள்ளதான ஆத்மாநந்தத்தை மாத்ரம் அளியும் போதும்

பல்லாயிரக் கணக்கில் தேவீ மந்த்ர ஜபம் செய்.



50\. आगर्भा दाकुल परिबृढा दाचतु र्वक्त्रतोऽपि
त्वत्पादाब्ज प्रपदन परान्वेत्सिन श्चन्द्रमौळे ।
मायायाश्च प्रपदनपरे ष्वप्रवृत्तिं त्वमात्थ
स्वामिन्नेवं सति यदुचितं तत्र देवः प्रमाणम् ॥

ஆக$^3$ர்பா$^4$ த$^3$ாகுலபரிப்$^3$ருடா$^3$ த$^3$ாசதுர் வக்த்ரதோऽபி
த்வத்பாதாப்ஜ ப்ரபதந பராந்வேத்ஸி நஶ்சந்த்ரமௌளே ।
மாயாயாஶ்ச ப்ரபதநபரேஷ் வப்ரவ்ருத்திம் த்வமாத்த$^2$
ஸ்வாமிந் நேவம்ஸதி யது$^3$சிதம் தத்ரதேவ: ப்ரமாணம் ॥

ஓ சந்த்ரமௌளியே! கருவிலுள்ள குழந்தை முதல் கோத்ர ரிஷி ப்ரும்மா முதலிய அனைவரும் உமது திருவடியில் ஶரணம் அடைந்தவர். அதனுல்தான் பிறந்து வளர்கின்றனர் என் பதைத் தாங்கள் அறிவீர்கள். மாயையில் முழுகியவர்கள் தங்கள் திருவடியை அடைய முடியாது. இந்தநிலையில் தாங்கள் எங்களுக்கு என்ன செய்யவேண்டுமோ அதைச் செய்யுங்கள். பராதீனஞன எனக்கு நீரே கதி.

51\. दण्डं धत्ते सकलजगतां दक्षिणो यः कृतान्तः
नामाप्यस्य प्रतिभयतनो र्नोपगृह्णीमहीति ।
प्राप्ताः स्मस्तं निगमवचसा मुत्तरो यः कृतान्तः
यद्वा तद्वा भवतु नपुन स्तस्य पश्येम वक्त्रम् ॥

த$^3$ண்ட$^2$ம்த$^4$த்தே ஸகலஜக$^3$தாம் த$^3$க்ஷிணோய: க்ருதாந்த:
நாமாப்யஸ்ய ப்ரதிப$^4$யதனோர் நோபக்$^3$ருஹ்ணீமஹீதி ।
ப்ராப்தா: ஸ்மஸ்தம் நிக$^3$மவசஸா முத்தரோய: க்ருதாந்த:
யத்வா தத்வாப$^4$ வது நபுநஸ் தஸ்ய பஶ்யேம வக்த்ரம் ॥

எல்லா உலகங்களுக்கும் தெற்கே இருக்கும் யமன் எல்லோரையும் தண்டித்துக்கொண்டிருக்கிருர். அவர் பெயரே பயங்கரமானதால் அதையே கூறமாட்டோம். வேதம் கூறியபடி எல்லாவற்றிற்கும் மேலான உம்மைச் சரணமடைந்தோம். எது வேண்டுமாஞலும் வரட்டும். இனி யமன் முகத்தில் விழிக்கமாட்டோம்.

**ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதர் இயற்றிய**
**ஶாந்திவிலாஸம் முற்றிற்று.**

வேதம் தேவீ பாகவதம் ஸப்தசதீ பாராயணம் செய்

# ஓர் நற்செய்தி.

## ஆஸ்திக அன்பர்களுக்கு நமஸ்காரம்!

முதலில் இதுவரை விஷயதானம்செய்துவந்த ஸ்ரீமான்கள் பண்டிட் **E. S. K. ஸ்வாமி**, டாக்டர் **வெங்கிடசாமி, T. S. பாலக்ருஷ்ண சாஸ்திரிகள்** முதலியவர்களுக்கு நன்றி செலுத்துகிறோம். புதிய வருஷத்தில் இவர்களுடன் "**அக்ஷய பரணி**" முதலிய சிலரும் விஷயதானம் செய்கிறார்கள்.

புதுஆண்டு நிர்விக்நமாக நடக்க முதலில் கணபதி ஹோமமும், ஐதரேயம், சாந்தோக்யாதி உபநிஷத்துக்களின் ஸாரம், சிவகீதை, த்ரிபுரா ரஹஸ்யம், பக்தவிஜயமெனும் திருவிளையாடற் புராண ஸாரம், மற்றும் சில அரிய ஸ்தோத்திரங்கள், பழய அம்சமான பால பாரதம், த்யாகோபநிஷத், ஜோஸ்யம், ஆயுர்வேதம், மாதர் பகுதி இவைகள் தொடர்ந்து ப்ரசுரமாகும்.

கடந்த 12 ஆண்டுகளில் தங்கள் பேராதரவினால் வளம்பெற்று வளர்ந்துவிட்டது "**வைதிக தர்ம வர்த்தனீ**" எனும் குழந்தை. வரப்போகும் புத்தாண்டில் அது புது மலர்ச்சியுடன் பவனி வருவதற்கு ஆவனச் செய்ய திட்டமிட்டிருக்கிறோம். அதைப்பற்றி ஓரிரண்டு வார்த்தைகள் :

## புதிய அம்சங்கள்.

### ★ பக்கங்கள் :

பேப்பர் விலையின் ஏற்றம் கண்டு தயங்காமல், தர்மத்தையே குறிக்கோளாகக் கொண்டு அதிக பக்கங்களுடன் புதுவருஷ ஆரம்பத்திலிருந்து வெளியிடுகிறோம்.

### ★ மஹா பாரதப் பூஞ்சோலை :

மஹா பாரதமெனும் அகண்ட ஸமுத்ரத்தில் காணக் கிடைக்கா பொக்கிஷங்கள் மூழ்கிக் கிடக்கின்றன. எத்தனை எத்தனை தர்மங்கள்! தர்ம சூக்ஷ்மங்கள்! உபாக்யானங்கள்! நீதிக் கதைகள்! வாழ்நாளில் பாரதப் புத்தகத்தைப் புரட்டிப் பார்ப்பதற்கும் நம்மில் எத்தனை பேர்களுக்கு நேரமும் வசதியும் உண்டு? ஓரளவு கதையின் போக்கைத் தெரிந்துகொண்டிருக்கலாம். ஆனால் அங்கு அங்கு காணப்படும் கோடி கோடி ரஸங்களை நாம் எப்படி அனுபவிப்பது? இந்தக் குறையைப் போக்கடிக்க வேண்டி, பாரதக் கடலில் குளித்துத் திளைத்தவரான "**பாரத கேஸரி**" ஸ்ரீமான் **T. S. பாலக்ருஷ்ண சாஸ்திரிகள் அவர்கள்** தான் கண்டெடுத்த முத்துக்களை நமக்கு வாரி வழங்கப்போகிறார்கள் "**மஹா பாரதப் பூஞ்சோலை**" எனும் தலைப்பில் தனித்தனி கதைகளாக தொடர்ச்சியாக எழுத இசைந்துள்ளார்கள்.

### ★ நவரஸப் பகுதி :

பரீக்ஷார்த்தமாக இதுவரை குறைந்த அளவில் வெளியிட்டு வந்த இந்தப் பகுதியை இன்னும் சற்று விஸ்தாரமாக்குகிறோம். முக்யமாகப் பெரியோர்களின் வாழ்க்கையில் நடந்த அற்புதங்கள், கவிகளின் சாதுர்யம், பக்தி அனுபவங்கள், உயர் ரக ஹாஸ்ய ரஸம் இவைகளெல்லாம் அடங்கிய கதம்பமாக வெளியிடுகிறோம். இதை நமக்களிக்கும் பொறுப்பை "**அக்ஷயபரணி**" அவர்கள் ஏற்றுக் கொள்கிறார்கள்.

### ★ சந்தேக விளக்கம் :

ஆசிரியர் அவர்களுக்கு இதுவரை தனியாகப் பல அன்பர்கள் தங்களுக்கு ஏற்படும் சந்தேகங்களைத் தெளிவாக்கும்படி எழுதி வந்திருக்கிறார்கள். மதம், ஆசாரம், சாஸ்த்ரம் இவை சம்மந்தமான வினாக்களுக்கு விடையளிப்பது நம் நேயர்கள் யாவருக்கும் பயன்படும் என்ற நோக்கத்துடன் இந்தப் புதுப் பகுதியை ஆரம்பிக்கிறோம். பிரசுரிக்கத் தக்க கேள்விகளையும் அதற்கு சாஸ்த்ர ஸம்மதமான பதில்களையும் ப்ரசுரிக்கிறோம். கேள்வி அனுப்புபவர்கள் ஆங்கில மாதத்தின் 15ந்தேதிக்குள் முழு முகவரியுடன் அனுப்பலாம். சந்தேகங்களை ப்ரசுரிப்பதில் ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. தனிப்பட்ட முறையில் பதில் அனுப்ப இயலாது.

### ★ கல்கி புராணம் :

பதினெண் புராணங்களை சேவித்துவிட்டு உபபுராணங்களைக் காண விழையும் நம்மை வரவேற்கிறது கல்கிபுராணம். புது வருஷத்தில் பல அபூர்வவிஷயங்களடங்கிய இந்த புராணம் தொடர்ச்சியாகப் பெரும்பகுதியில் இடம்பெறும்.

மேற்கூறிய திட்டங்கள் அன்பர்கள் யாவரையும் மகிழ்விக்குமென்று நம்புகிறோம். தங்களின் தொடர்ந்த ஆதரவை எதிர்நோக்கித்தான் இந்த தர்மத்தைத் தளராமல் நடத்த முன் வந்திருக்கிறோம். தார்மிகர்கள் தோள் கொடுத்து இந்தப்பணியை சிறப்படையச் செய்வதோடு சந்தா ரூ. 5-ஐ முன்னதாக அனுப்பி புதியஅன்பர்களிடமும் அறிமுகப்படுத்தவேண்டுகிறோம். இந்த புரட்டாசியுடன் முடிந்தவர்களுக்கு ஞாயகத்திற்காக தனி சிலிப் வைத்துள்ளோம்.

**ஆசிரியர்.**

# புரட்டாசிமீ கோசாரப்பலன். ஜோதிஷப் பகுதி.

ஜோதிஷபானு E. S. K. ஸ்வாமி, பாரத் கிரஹ ஸஞ்சார ஆசிரியர்,
4, கிருஷ்ணமாசாரி தெரு, தி. நகர், சென்னை-17.

### மேஷ ராசி

*அசுவனி, பரணி, கிருத்திகை முதல் பாதம் முடிய*

குரு அஷ்டமத்திலும் சனி பாக்யத்திலும் ராகு ஆறிலும் கேது விரயத்திலும் இருக்கிறார்கள். சூரியன் 6 ல் இருக்கிறார். இதனால் உஷ்ணாதிகமான வகையில் சிறிது தேக சுகம் பாதித்து குணமாகும். ராஜாங்க மூலமாய் சில நிர்பந்தம் உண்டாகும். குடும்ப சுகம் ஏற்பட்டுவரும். சில பொருள் விற்கும்படியாகும். கோவுக்கு பூஜை செய்துவர நன்மை உண்டாகும்.

### ரிஷப ராசி

*க்ருத். 2ம் பாதம் முதல் ரோகிணி மிருகசீரிஷம் 2ம் பாதம் முடிய*

குரு ஏழிலும் சனி எட்டிலும் ராகு ஐந்திலும் கேது பதினொன்றிலும் இருக்கிறார்கள். சூரியன் பஞ்சமத்திலிருக்கிறார். இதனால் புத்திராதிகளுக்கு அசௌக்யம், மனதிற்கு ஸஞ்சலம், வீண் விரயங்கள் குடும்பத்தில் வைத்திய செலவுகள் ஏற்படும். தினமும் நவக்ரஹப் பிரதக்ஷிணம் செய்துவர நலம்.

### மிதுன ராசி

*மிருக. 3ம் பாதம் முதல் திருவாதிரை, புனர்வசு 3ம்பாதம் முடிய*

குரு ஆறிலும் சனி ஏழிலும் ராகு நான்கிலும் கேது பத்திலுமிருக்கிறார்கள். சூரியன் சுகத்திலிருக்கிறார். இதனால் வீண் சச்சரவு ஏற்படும். விவாத விஷயமாய் கவலை, சுகக்குறைவு ஏற்படும். நம்பி ஏமாறும்படியாகும். குடும்ப நிர்வாகத்தில் குறைவு உண்டாகும். சுப்ரமணியருக்கு அபிஷேகம்செய்ய நன்மை.

### கடக ராசி

*புனர்வசு 4ம் பாதம் முதல் புஷ்யம், ஆயில்யம் முடிய*

குரு பஞ்சமத்திலும் சனி ஆறிலும் ராகு மூன்றிலும் கேது பாக்கியத்திலும் இருக்கிறார்கள். சூரியன் மூன்றிலிருக்கிறார். இதனால் புதுவகை தொழிலில் ஈடுபடும்படியாகும். புதியவகை முயற்சி கூடும். பந்துக்களால் கவலை ஏற்படும். வருமானத்திற்குரிய சூழ்நிலை ஏற்படும். வெளியூர் போய்வரும்படியாகும். சாதுக்களை தரிசிப்பது மேன்மை.

### சிம்ம ராசி

*மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் முடிய*

குரு நான்கிலும் சனி ஐந்திலும் ராகு இரண்டிலும் கேது எட்டிலும் இருக்கிறார்கள். சூரியன் இரண்டிலும் இருக்கிறார். குடும்ப செலவு அதிகமாகும். தேக சுகம் சிறிது பாதிக்கும். அலைச்சல் காரியங்களில் ஈடுபடுதல் வர வேண்டியவை தாமதப்படல் பந்துஜன ஆதரவு, புண்யவகையில் செலவு இப்படி ஏற்படும். பிரதி ஞாயிறிலும் பாம்பின் புற்றுக்கு பசும்பால் விட்டுவரவும்.

### கன்னியா ராசி

*உத்திரம் 2ம் பாதம் முதல் ஹஸ்தம் சித்திரை 2ம் பாதம் முடிய*

குரு மூன்றிலும் சனி நான்கிலும் ராகு ஜன்மத்திலும் கேது ஏழிலும் இருக்கிறார்கள். சூரியன் ஜன்மத்திலிருக்கிறார். இதனால், சரீர அசௌக்கியம்

**நவராத்ரி கன்யா பூஜை கோரிய பலனைத்தரும்.**



வீண் கவலைகள் வைத்திய செலவுகள் பணமுடை வரவேண்டியவை தடை,
சிலர் பகை, பிறர் ஆதரவு இப்படி ஏற்படும். லலிதா பூஜை செய்து வருவது
நன்மை. அஷ்டோத்திரம் செய்துவர வேண்டும்.

### துலா ராசி

*சித். 3ம் பாதம் முதல் சுவாதி விசாகம் 3ம் பாதம் முடிய*

குரு இரண்டிலும் சனி மூன்றிலும் ராகு பன்னிரண்டிலும் கேது ஆறி
லும் இருக்கிறார்கள். சூரியன் பன்னிரண்டில் இருக்கிறார். இதனால் அதிக
விரயம் ஏற்படும். சுகம் குறையும். புதிய வகையில் மாற்றமுண்டாகும் சில
ருக்கு வருமானம் கூடும். குடும்பத்தில் சில கவலைகள் உண்டாகும். பந்து
பகையும் ஏற்படுவதாகும். பிதுர் தேவதைகளை ஆராதிப்பது நலம்.

### விருச்சிகராசி

*விசாகம் 4ம் பாதம் முதல் அனுஷம் கேட்டை முடிய*

குரு ராசியிலும் சனி இரண்டிலும் ராகு பதினொன்றிலும் கேது ஐந்திலும்
இருக்கிறார்கள். சூரியன் லாபத்திலிருக்கிறார். இதனால் வெளியூர் அலைச்சல்
சிலருக்கு ஏற்படும். இருப்பிடம் மாறுதல் அல்லது உத்தியோக மாறுதல் ஏற்
படும். சிலபொருள் விற்கும்படியாகும். அன்னியர் உதவியை எதிர்பார்க்
கும்படி யாகும். பிரதி வெள்ளிக்கிழமையிலும் லக்ஷ்மிபூஜை செய்வது நலம்.

### தனுர் ராசி

*மூலம், பூராடம், உத்திராடம் முதல் பாதம் முடிய*

குரு விரயத்திலும், சனி ராசியிலும், 10ல் ராகுவும், சுகத்தில் கேதுவும்
இருக்கிறார்கள். சூரியன் பத்தில் இருக்கிறார். இதனால் ராஜாங்க மூலமாய்
கவலை ஏற்பட்டு விலகும். புதிய முயற்சிகள் தடைப்படும். சிறிது தேகசுகம்
பாதித்து குணமாகும். சிலரிடம் மனஸ்தாபப்படவும் ஏற்படுவதாகும். துர்க்கா
ஜபம் செய்வது நன்மையாகும்.

### மகர ராசி

*உத்திரா. 2ம்பாதம் முதல் திருவோணம், அவிட். 2ம்பாதம் முடிய*

குரு லாபத்திலும், சனி விரயத்திலும், ராகு பாக்கியத்திலும், கேது மூன்றி
லுமிருக்கிறார்கள். சூரியன் 9ல் இருக்கிறார். இதனால் புதிய முயற்சிகள் கூடி
வரும். பிறர் சகாயம் உண்டாகும். அந்தரங்கமான கவலை ஏற்பட்டுவரும்.
பிறர் தூஷணை ஏற்படும். பந்துக்களால் கிலேசமும், சிநேக விரோதமும் ஏற்
படுவதாகும். சனிக்குப் பிரீதி செய்துவரவும்.

### கும்பராசி

*அவிட்டம் 3ம் பாதம் முதல் சதயம், பூரட். 3ம் பாதம் முடிய*

குரு பத்திலும், சனி பதினொன்றிலும், ராகு எட்டிலும், கேது இரண்டிலும்
இருக்கிறார்கள். சூரியன் 8ல் இருக்கிறார். இதனால் வெளியூர் பிரயாணம் உண்
டாகும். சிநேக ஆதரவு ஏற்படும். சில பொருள் வாங்க நேரும். புண்ணிய
காரியங்களில் செலவுகளுண்டாகும். பழைய வேதனை சிலது நீங்கும். தக்ஷிணா
மூர்த்தி அஷ்டோத்திரம் பாராயணம் செய்து வருவது நன்மை.

### மீன ராசி

*பூரட்டாதி 4ம் பாதம் முதல் உத்திரட்டாதி, ரேவதி முடிய*

குரு பாக்கியத்திலும், சனி ஜீவனத்திலும், ராகு ஏழிலும், கேது ராசியிலும்

**கன்யகைகளை சாப்பிடச்சொல்லி அவர்களுக்கு**

இருக்கிறார்கள். சூரியன் ஏழிலிருக்கிறார். புதியவகையில் தொழில் கிடைக்கும். தன நடப்பில் சில நன்மை ஏற்படும். குடும்பத்தில் நிம்மதியிராது. சுபகாரியங்களிலும் புண்ணிய காரியங்களிலும் செலவுகள் உண்டாகும். வியாழக்கிழமை தோறும் ஒருவருக்கு அன்னம் போடுதல் விசேஷம்.

## புஸ்தக அறிமுகம்.

சென்ற மாதம் வெளியிட்டபடி 12—10—59 க்குள் கடிதம் எழுதுபவருக்கே மலிவான விலை. அநேக சந்தாதாரர்கள் சந்தர்ப்பத்தை பயன் படுத்திக்கொண்டு தேவையான நூல்களை வாங்கிக் கொள்ளுகின்றனர். சிலர் பழய ப்ரசுரமான ஸ்தோத்ர சிந்தாமணி, நித்யபஞ்சாயதன பூஜை, புவனேஶ்வர த்ரிசதீ, ஸௌபாக்ய அஷ்டோத்ர சதநாம, வேதமும் வேதாங்கமும் என்பவைகளை கேட்கின்றனர் இந்த ஐந்தும் கையில் ஒரு காப்பி கூட இல்லை. அதனால் அதற்கு எழுதாதீர்கள். ஸந்த்யா வந்தனம் அச்சிலிருக்கிறது. அதைத் தவிர மற்றதை மறுமுறை அச்சடிப்பதற்கில்லை.

N. B:— சிலர் புத்தக விலை மாத்ரம் அனுப்புகின்றனர். போஸ்ட்டுக்கு ஸ்டாம்பு ஒட்டாமல் அனுப்பினால் அங்கு 2 மடங்கு சார்ஜ் வசூலிப்பர். **புத்தகங்களுக்கு மாம்பலம் குருகுலத்திற்குத்தான் எழுதவேண்டும். பதில் வேண்டுவோர் ரிப்ளை கார்டு எழுத வேண்டுகிறோம்.**

## ஓர் அரிய அபூர்வ அதிர்ஷ்ட ஸமயம். இலவசம் !

### 8 நயா பைசாவுக்கு 6 அணா புஸ்தகம்.

பழைய பத்ரிகைகளில் சில கைவசமிருக்கின்றன. புருஷஸூக்த, ஸ்ரீஸூக்தங்களில் ஒரு பகுதி, சந்த்ரன், புதன்போன்ற நவக்ரஹ மந்த்ரம், சிவ, துர்க்கா அஷ்டோத்தரம், கீர்த்தனை, விஷ்ணு ஹ்ருதயம், ஸந்தான கோபால மந்த்ரம் போன்ற பல விஷயங்கள் அவரவர் அதிர்ஷ்டம்போல் கிட்டும். புக்-போஸ்ட்டுக்காக 8 ந. பைசா ஸ்டாம்பு அனுப்பினால் இதில் இந்த விஷயம் என கவனியாமல் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு காப்பி அனுப்புவோம். **மாம்பலம் குருகுலம்**, 2, ஸ்டேஷன் ரோடு, **W. மாம்பலம், சென்னை-17**-க்குத்தான் எழுதவேண்டும்.

11-ம் ஆண்டு 12 காப்பிகள் சிலவை கிடைக்கும். தபால் செலவுடன் ரூ. 4—8—0.

**வஸ்த்ரமளித்தால் தேவீ கடாக்ஷம் உண்டாகும்.**

## ஹாலாஸ்ய மஹிமை.

ஆகமப் பகுதி.

### மாணிக்கவாசகருக்கு உபதேசம்.

வாதபுரி என்ற ஊரிலே பிராம்மண குலத்தில் மந்த்ரி வம்சத்தில் ஓர் குழந்தை தோன்றினான். அவன் இளமையிலேயே ஸகலகலாவல்லவனாக இருந்ததை அறிந்த "அரிமர்த்தன பாண்டியன்" அவனை மந்திரியாக அமைத்துக் கொண்டான். ஒரு நாள் குதிரைச்சாலை காப்பவன் அரசனிடம் வந்து குதிரைப்படை குறைந்து வ்ருவதால் சிறந்த ஜாதிக் குதிரைகளை வாங்கவேண்டும் என்றான். அரசன் அருகில் இருந்த வாதவூரார் என்ற "மாணிக்கவாசகரிடம்" வேண்டிய பொருள்களை எடுத்துச் சென்று குதிரைகளை வாங்கிவா என்றார். அங்ஙனமே அவர் வேண்டிய பொருள்களை எடுத்துக்கொண்டு அருகிலுள்ள பெருந்துறை என்ற ஊருக்குச்சென்று இப்பொருள்களையெல்லாம் சிவனுக்கும் அடியார்களுக்கும் அளிக்க உதவிபுரியவேண்டும். அதற்கு அருள்புரிய வேண்டுமென சிவனை வணங்கினார். சிவபெருமான் குருந்த மரத்தினடியில் சீடர்களுக்கு தத்வோபதேசம் செய்வதைக் கண்டார். அவர் திருவடியில் வணங்கிப் போற்றும்பொழுது குரு அவருக்குத் தீக்ஷை செய்வித்து அவர் நாவில் ஞான வாணியைத் தாண்டவமாடச் செய்தார். உடனே அவர் எண்ணிறந்த பாடல்களை ஆழகாகப் பாடினார். அதைக்கண்டு மகிழ்ந்து பகவான் மாணிக்கவர்சகர் எனப் பெயரிட்டு சைவம் தழைத்தோங்க பணி செய்யும்படிக் கூறினார்.

மாணிக்கவாசகர் கொண்டுவந்த பொருள்களை எல்லாம் கோயில் குளம் முதலிய திருப்பணிகளுக்கும் அடியார்களுக்கும் அளித்து ஓயாமல் சிவனைத்துதித்து ஆனந்தப் பரவசனாகி வந்தார். பாண்டிய ராஜன் இவைகளை அறிந்து கோபங்கொண்டு குதிரைகளுடன் உடனே வாவென ஆளை அனுப்பினான். இதைக்கேட்டு பகவானிடம் சென்று பொருள்களையெல்லாம் அடியார்க்கும் ஆண்டவனுக்கும் அளித்தேன். குதிரைக்கு என்செய்வேன் ! எங்கு செல்வேன்? என்று கதறினார். பகவான் பக்தா! அஞ்சாதே! நீ மதுரை செல். ஆடிமீ முதல்தேதி குதிரைகளோடு

**ராத்ரி ரூபமான தேவியை நவராத்ரியில் பூஜி.**

நாம் வருவோம் என்றார். மாணிக்கவாசகர் மதுரை மாநகரம் வர அவரது பந்துக்கள் அனைவரும் அவருக்கு அரசன் கோபத்திற்கு ஆளானால் அதனால் வரும் துன்பம் இன்னதென அறிவூட்டினார்கள். இல்லறத்தை வெறுத்து பக்தியை விரிவாகக் கூறி எதற்கும் அஞ்சா நிலையை அவர்களிடம் வெளியிட்டார்.

அரசன் எதிர்பார்த்த காலத்தில் குதிரைகள் வராததால் கோபங்கொண்டு வாதவூரார்மீது கல்லைத் தூக்கி வைத்தும், கை கால்களுக்கு விலங்கிட்டும், சிறையிட்டும் ஹிம்ஸித்தான். அவர் பகவானையே த்யானம் செய்து கொண்டிருந்ததால் பகவான் கருணைகொண்டு நந்தியை அழைத்து காட்டிலுள்ள நரிகளையெல்லாம் ஜாதிக்குதிரைகளாக்கி சிவகணங்களை எல்லாம் அதன்மீது அமரச்செய்து ஆவணி மூலத்தன்று மதுரைமா நகரம் செல்லவேண்டும் என உத்தரவிட்டார். தானும் வேதத்தைக் குதிரையாக்கி அதன்மீது ஏறி அஸ்வபாலர்களின் தலைவன்போல் வந்து சேர்ந்தார். முன்னே பல வாத்தியங்கள் முழங்கின. அஸ்வங்களும் அஸ்வபாலர்களுடைய ஆடையாபரணங்களும் அனைவர்கண்களையுமிழுத்தன. அரசன் வாதவூராரை விடுவித்து இவர்களெல்லாம் எந்த ஊரார்? இக் குதிரைகள் எந்த தேசம்? இவைகளின் லக்ஷணம் என்ன? என பல கேள்விகளைக்கேட்டு இத்தகைய குதிரைகள் வரும் என்று எண்ணாமல் உம்மைச் சிக்ஷித்தேன். தாங்கள் என்னை மன்னிக்கவேண்டும் என்று வேண்டினான். வாதவூரார் சில வசனங்கள் கூறி அஸ்வபாலகர்களிடமிருந்தே தெரிந்து கொள்ளலாமென்றார். குதிரைப்பாகன் வேஷத்தில் வந்த சுந்தரமூர்த்தி மிக கம்பீரமான தோற்றத்துடன் அரசன் முன் தோன்றி உமது மந்திரியளித்த பொருளைப் பெற்று இந்த உயர்ந்த லக்ஷணம் பொருந்திய குதிரைகளைக் கொண்டுவந்தோம். இவைகளை ஏற்றுக் கொள்ளும் எனக் கூறினார்.

அரசன் ஸர்வேசனது உருவைக்கண்டு ஆனந்தப் பரவசனானான். தன்னிடமுள்ள உயர்ந்த பட்டு பீதாம்பரங்களையும் ஆபரணங்களையும் அவருக்கு ஸன்மானமாக அளித்தான். அவர் அதை ஏற்று விடைபெற்றுச்சென்றார்.





## பரி நரியாகிய கதை.

வாதவூரார் பகவான் பக்த பராதீனனான தன்னைக் காத்த வைபவத்தை நினைத்து இரவெல்லாம் தூக்கமில்லாமல் பகவானைப் போற்றினார். அரசனும் இதுவரைக் காணாத அரிய அஸ்வங்களையும் அற்புதமான குதிரைப் பாகத் தலைவனையும் கண்டப் பேரானந்தத்தினால் அவைகளையே எண்ணி எண்ணி மகிழ்ந்தான். நள்ளிரவில் இறைவன் லீலையால் குதிரைகள் எல்லாம் நரியாகி சங்கிலிகளையெல்லாம் அறுத்துக்கொண்டு பழைய குதிரைகளையெல்லாம் கடித்து ஊளையிட்டுக்கொண்டு வீதிகள் தோறும் சுற்ற ஆரம்பித்தன. இதைக்கண்டு ஊரெல்லாம் திடுக்கிட்டது. காலையில் அஸ்வபாலர்கள் அரசனிடம் அறிவிக்க அவர் கோபங்கொண்டு வாதவூராரைக் கடிந்து அவரைப் பலவகையிலும் சிக்ஷித்து குதிரைக்காக கொண்டுபோன பொருள்களையெல்லாம் வசூலிக்கும்படி உத்தரவிட்டான். யமகிங்கரர்போல் ராஜஸேவகர் வாதவூராரை நடுப்பகலில் கடும் வெய்யிலில் நிறுத்தி கருங்கற்பாரைகளை அவர்மீது வைத்து ஹிம்ஸித்தார்கள்.

அவர் பகவானை நாடிக் கதறஸர்வேஸ்வரன் தன் தலையில் உள்ள கங்கையை கரைபுரண்டு ஓடும்படி வைகை நதிக்கு அனுப்பினார். நதியின் ப்ரவாஹம் மரங்களையெல்லாம் முறித்து வீடெல்லாம் புகுந்து பொருள்களையெல்லாம் இழுத்துச் சென்றது. ராஜ கிங்கரர் வாதவூராரை விட்டுவிட்டு தங்கள் வீடு, மனைவி-மக்கள், பொருள் முதலியவைகளைக் காக்க வீட்டுக்கு விரைந்தனர். வாதவூரார் உடனே பகவானுடைய ஸந்நிதிக்குச் சென்று துதித்து பக்திப்பரவசராக நின்றார்.

## பிட்டுக்கு மண்சுமந்த லீலை.

ஊரிலுள்ளோர் அனைவரும் அரசனிடத்தில் முறையிட, ஒவ்வொரு வீட்டாரும் இவ்வளவு தூரம் வைகையின் கரையை அடைக்கவேண்டுமென அரசன் உத்தரவிட்டார். எல்லோருமங்ஙனமே செய்தனர். வந்தி எனும் ஓர் கிழவி நாள்தோறும் பிட்டைச்சமைத்து பகவானுக்கு நிவேதநம் செய்து உண்டு மிகுதியை விற்று ஜீவித்துவந்தாள். அவள்

அனுதை. அரசன் ஆணையைக் கேட்டு தன் வீட்டிற்காக வேலைசெய்ய ஒருவரும் இல்லாததாலும், கூலி வேலைக்காரன் அகப்படாததாலும் நான் என்னசெய்வேன் என்று ஏங்கி பகவானைத் துதித்தாள். கருணைக்கடலான சுந்தரேசன் அழுக்கு ஆடையணிந்து தலையில் சும்மாடு கட்டி தட்டு மண்வெட்டிகளுடன், "வேலை பெற்று கூலி கொடுப்போர் உண்டா" என்று கத்திக்கொண்டு வந்தார். வந்தி அவரை அழைக்க உதிர்ந்த புட்டை முதலில் அளி. அதை உண்டு களைப்பாறி வேலை செய்வேன் என்றார். அங்ஙனமே அவள் ஸம்மதிக்க அப்புட்டை புசித்து வைகை வந்தார். மண்ணை வெட்டுவதும் அதிக பாரம் எனக் கீழே கொட்டுவதும் களைப்புற்றவர்போல் மரத்தடிக்கு வருவதும் உறங்குவதும் ஆடுவதும் பாடுவதும் ஆற்றில் விழுவதும் கரை ஏறுவதும் சிறிப்பதுமாக பல லீலைகளைச் செய்தார். அதிகாரிகள் இதைக்கண்டு பலமுறை கண்டித்தும் பயனில்லாமல் போகவே அரசனிடம் முறையிட்டார்கள். அரசன் வந்து இந்த இடம் மாத்திரம் அடைபடாமல் இருப்பதைக்கண்டு கோபங்கொண்டு பிரம்பால் அவர் முதுகில் அடித்தான். உடனே அக்கூலிக்காரன் மறைய அந்த அடி அரசன் மீதும் அவன் மனைவிமக்கள் மீதும் ஆங்குள்ள அனைவர்மீதும் விழுந்தது. கரையும் அடைபட்டது. வந்தி அவர் செய்த லீலையைக்கேட்டு தனக்கு என்ன தீங்கு வருமோவென பகவானை த்யானம் செய்தாள். கைலாஸத்திலிருந்து விமானம் வந்து வந்தியை அழைத்துச் சென்றது. மன்னன் ஒன்றும் தெரியாமல் திகைத்து நின்றபொழுது அசரீரியாக பகவான் இருந்து "வேந்தே நல்வழியில் நீ தேடிய பொருளைக்கொண்டு வாதவூரார் நமக்கே பணிசெய்தார். அதை அறியாமல் அவரை நீ சிக்ஷித்தாய்! நான் ரக்ஷித்தேன். இனி அவரைத் தனியே விட்டுவிடு" என்று கூறினார்.

அரசன் பகவானை இன்னாரென்று அறியாமல் அடித்த குற்றத்தையும் பக்தரான வாதவூராருக்கு அளித்த தீங்கையும் மன்னிக்கும்படி மந்திரியாகவேயிருந்து தன் நாட்டைக் காக்கும்படியும் வேண்டினான். மாணிக்கவாசகர் அதை மறுத்து துறவு பூண்டு பல திவ்ய க்ஷேத்ரங்களுக்குச்

---

**தாய்தான் சேயிடம் அன்புள்ளவளல்லவா?**



சென்று முடிவில் சிதம்பரம் சென்று தபோவனத்தில் பக்தி செய்துகொண்டிருந்தார்.

ஒரு ஸமயம் பௌத்தர்கள் தில்லையில் உள்ள தீக்ஷிதர்களை வாதத்தில் தோற்கடித்தார்கள். அவர்கள் நடராஜரிடம் முறையிட தபோவனத்தில் உள்ள வாதவூராரை அழைத்து வாதில் வெற்றி பெறுவீர் என்றார். அவர்கள் போய் அழைத்தும் அவர் வராமையால் மறுபடியும் நடராஜரிடம் முறையிட்டனர். அவர் கூறியபடி திருப்பெருந்துறை குருந்த மரத்தடியில் உம்மை ஆட்கொண்ட குருவின் ஆணையின்படி மாணிக்கவாசகரே வருக! என அழைத்தார்கள். உடனே ஓடிவந்து பௌத்தர்களை வாதத்தில் ஜயித்து விபூதியின் பெருமையைக் கூறி அவர்களையும் சைவர்களாக்கினார். இவர் மஹிமையை அறிந்து சோழராஜன் ஊமையாயிருந்த தனது பெண்ணை பேசும்படிச் செய்யவேண்டுமென மாணிக்கவாசகரை வேண்ட, அவர் பாட்டின் முதல் அடிகளால் சைவத்தைப்பற்றிச் சில கேள்விகளைக் கேட்டார். ஊமைப்பெண் வாய்திறந்து மற்ற அடிகளால் அதற்கு பதிலுறைத்தாள். எல்லோரும் ஆச்சர்யம் அடைந்து மாணிக்கவாசகரைப் போற்றினர். அவர் முடிவில் தில்லை நடராஜனின் ஜ்யோதிஸ்ஸில் சேர்ந்தார்.

## பாண்டியனுக்கு ஜ்வரம் நீங்கிய கதை.

இந்த பரம்பரையில் கூன்பாண்டின் என்பவன் அரசு புரிந்தான். சோழராஜன் தன் புத்திரியான மங்கையர்க்கரசியை அவருக்களித்து மணம் செய்வித்தான். அவன் ஜைனர்களிடத்திலகப்பட்டு வைதிக வழக்கத்தை விட்டு சமணர்களுக்கு இடமளித்து சைவத்தை மறந்து நின்றான். மங்கையற்கரசி தம் குலதேவதையான மீனாக்ஷி சுந்தரேசரை தினந்தோறும் வணங்கித் தன் நாடு முன்போல் வைதிக முறையை ஏற்கும்படி வேண்டினாள். ஒரு நாள் ஆலயத்தில் சோழநாட்டிலிருந்துவந்த ஒரு ப்ராம்மணன் மூலம் சீர்காழியிலே ஞானஸம்பந்தர் எனும் குழந்தை தோன்றி ஸகல வேத சாஸ்த்ரங்களைக் கற்று பல பக்திப் பாடல்களைப் பாடுகிறார். மூன்றுவது வயதில் உமையவள்

---

**அவளை அர்ச்சிக்க இதே உயர்ந்த உரியகாலம்.**

ஞானப்பாலைத் தர அதனால் அது அருள்பாக்கள் பாடி பகவானை ஸந்தோஷப்படுத்தி முத்துப்பல்லக்கு, பொன் தாளம் முதலியவைகளைப் பெற்று சிவஸ்தலம் யாத்திரை செய்கிறார் என்பதை அறிந்தாள். அச்சிறுவனை மதுரைக்கு வரும்படி அழைத்தாள். அவர் இரவில் ஓர் மடத்தில் வந்து தங்க சமணர்கள் அம்மடத்திற்கு தீயிட்டனர்.

சம்பந்தர் சிவனைத்துதித்து அத்தியை கூன்பாண்டியனுக்கு ஜ்வரமாகும்படிச் செய்தார். எவ்வளவு சிகித்ஸை செய்தும் அது அகலவில்லை. மங்கையற்கரசி சம்பந்தரை அழைத்து அந்நோயை அகற்றும்படி வேண்டினாள். சமணர் தாங்கள் ஒரு புறத்தையும், சம்பந்தர் ஒரு புறத்தையும் நோய் இல்லாமல் செய்வதாகக்கூறினர். சமணர்கள் எவ்வளவு பாடுபட்டும் நோய் அகலவில்லை. சம்பந்தர் தன்னிடமுள்ள விபூதியை எடுக்க அது மாயை விபூதி, அதை தரிக்கக்கூடாதென மறுத்தனர். ஆலயத்தில் உள்ள அடுப்பங்கரை சாம்பலைக் கொண்டுவரச் சொல்லி "மந்திரமாவது நீறு" என்ற பாட்டைக்கூறி விபூதி இட அவர் பக்கத்தில் உள்ள ஜ்வரமகன்றது. சமணர் பக்கத்தில் உள்ள ஜ்வரத்தையும் அகற்ற வேண்டும் என அரசி வேண்ட அங்ஙனமே திரு நீற்றால் நோயுடன் கூனையுமகற்றினார். அன்றுமுதல் "கூன்பாண்டியன், சுந்தர பாண்டியன்" எனப்பெயர் பெற்றான்.

## சமணர் கழுவேற்றிய கதை.

அரசன் சம்பந்தரை வணங்கி பஞ்சாக்ஷரத்தை உபதேசம் பெற்று வேதநெறியைக் கடைப்பிடித்தான். அரசனும் தேவியும் ஒன்று கூடி ஆலயம் சென்று ஜைன மதத்தை அழிக்க அருள்புரிய வேண்டுமென்றார்கள். இதனிடையில் சமணர்கள் அவமானமடைந்து ஞான சம்பந்தரை வாதத்திற்கு அழைத்து அவமானப்படுத்த வேண்டுமெனக் கருதினார்கள். சம்பந்தரை அவரது மந்த்ரத்தை ஓலையில் எழுதச்சொல்லி, தங்கள் மந்த்ரத்தையும் எழுதி, நெருப்பில் போடுவதாகவும் எரியாமல் இருக்கும் மந்தரமும் மதமுமே சிறந்தது, கைகொள்ளத்தக்கது.

உங்களுக்கு தர்மத்தைப் புகட்டுவது வை. த. வர்த்தனீ.



தோற்றவர் கழுவேறுவது என்றனர். அது சிவன் எதிரில் வேண்டாம். பாண்டியனது எதிரில் சிவாலயமில்லா இடத்தில் நடத்தவேண்டும் என ஜைனர்கூற சம்பந்தர் அதையும் ஏற்க இருவரும் அவரவர் மந்தரத்தை எழுதி தீயில் போட சமணர் ஓலை எரிந்தது.

சம்பந்தர் ஓலை எரியவில்லை. இதில் ஏதோ சூது இருக்கிறது எனச்சொல்லி மற்றோர் முறை இருவரும் எழுதி வைகையாற்றில் விடுவது; ப்ரவாஹத்தை எதிர்த்து வரும் ஏடும் மந்திரமும் மதமும் சிறந்தது என இருவரும் பேசிமுடித்து எழுதினார்கள். "வாழ்க அந்தணர்" என்ற பாட்டை எழுதி ஓலையை நதியில் விட அது நதியில் எதிர்முகமாக வெகுதூரம் சென்றது. இதைக்கண்டு தேவர்கள் புஷ்பமாரிப் பொழிந்தனர். பாண்டியன் மனமகிழ்ந்தான். சமணர்கள் தாங்கள் தோற்றதால் தோற்றவர் கழுவில் ஏறவேண்டும் என்ற பிரதிக்ஞை செய்தபடி சிலர் கழுவேறினர். சிலர் அடியார்கள் தடுத்தும் அதைக் கேழ்க்கவில்லை. சிலர் மட்டிலும் சைவராக ஆனார்கள். ஏட்டை எடுத்துத் தரும்படி அரசன் கூற அது கிடைத்த இடம் திருவேடகமானது.

## வன்னியும், கிணறும், லிங்கமும் அழைத்த கதை.

தனபதி எனும் வைஶ்யர் சிவ பக்தியில் ஈடுபட்டவர். இறைவனருளால் அவருக்கோர் பெண் பிறக்க அவளை தனது உறவினரான ஒருவருக்குக் கொடுப்பதாக வாக்கு அளித்தான். விவாஹமாவதற்குள் பெண்ணின் தந்தை இறக்க பெண்ணுக்குப் புருஷனாக வரிக்கப்பட்டவர் அங்கு வந்து அப்பெண்ணை அழைத்துச்சென்று மதுரையில் பந்துக்கள் முன்னிலையிலேயே விவாஹம் செய்துக் கொள்வதாக தீர்மானித்துக் கிளம்பினான். வழியில் ஓர் சிவாலயத்தைக்கண்டு அங்கு தங்கி சமையல் செய்து சாப்பிட்டு உறங்கினார்கள். இரவில் ஓர் ஸர்ப்பம் தீண்ட புருஷன் இறந்தான். இதைக்கண்டு அப்பெண் கதறி அழுதாள். அவ்வழியாக வந்த ஞானசம்பந்தர் அப்

அதை ஆதரித்து அடுத்த ஆண்டு சந்தா அனுப்புங்கள்.

பெண்ணினிடம் இரக்கம் கொண்டு கடாக்ஷ வீக்ஷணத்தினால் அவனை எழுப்பினர்.

அவர் கூறியபடி அப்பெண் அவனை அங்கே மணந்து இருவருமாக மதுரைச்சென்றனர். குழந்தையும் பிறந்தது. இவனது மூத்த மனைவியின் பிள்ளைகள் இவளுடைய பிள்ளையுடன் சண்டையிடும்பொழுது மூத்தமனைவி இவளை பார்த்து நீயாரோ? என்ன ஜாதியோ! நீ தாஸி! விதிப்படி மணந்தவளல்ல என பலவாறு இகழ்ந்தாள். அவள் சுந்தரேசனது ஆலயம் சென்று என்கல்யாணத்திற்கு எவரும் சாக்ஷியில்லாததனால் என் சக்களத்தி என்னைப் பலவாறு நிந்திக்கின்றாள். நீர் என்னைக் காக்கவேண்டுமெனப் பிரார்த்தித்தாள். உடனே பகவானது விருப்பப்படி அங்கு முன்னம் கல்யாணத்திற்கு சாக்ஷியாகயிருந்த வன்னிமரமும் கிணறும் லிங்கமும் இவ்வாலயத்தில் தோன்றி விவாஹமானதற்கு நாங்களே சாக்ஷிகளாவோம் என்றன. இதைக்கேட்ட அனைவரும் ஆனந்தமடைந்தனர். வைச்யன் இளையாளைப்பழித்த மூத்தாளை நீ இனி என் பத்னியல்ல எனத்தள்ளிவைக்க இளையவள் நாத! இவளால் அல்லவோ எனது கற்பு நன்கு விளங்கிற்று. ஆதலால் இவளை விலக்கலாகாதெனக் கூற வைச்யன் இருவருடனும் மீனாக்ஷி சுந்தரேசனிடம் பக்தி செலுத்தி இன்பமாக வாழ்ந்தனர்.

திருவிளையாடற் புராணம் முற்றிற்று.

வஸிஷ்டர் முதலிய மஹரிஷிகள் ஹாலாஸ்யமாகாத்மியம் கூறிய அகஸ்த்யரை வணங்கி உமதருளால் நாங்களும் மீனாக்ஷி சுந்தரேசனை ப்ரத்யக்ஷமாக தர்சிக்கவேண்டுமென ப்ரார்த்தித்தனர். பகவானும் அங்ஙனமே எதிரில் தோன்றி எல்லோரையும் ஆசீர்வதித்து மறைந்தார்.

"ஓம் தத்ஸத்"

"சிவார்ப்பணமஸ்து"

புரட்டாசியுடன் 12-ம் ஆண்டு பூர்த்தியானது.



## 5. யோகாவ்ருத்தி ப்ரஶம்ஸனம்.

பலனைக் கோராமல் ஶ்ரௌத ஸ்மார்த்த கர்மாக்களைச் செய்பவன் க்ரியா யோகியைவிட சிறந்தவன். யோகத்திற்கு கர்மாவும் ஸித்திக்கு ஶமதமமும் காரணம். இந்த்ரியார்த்தங்களில் ஈடுபடுபவன் தனக்குத்தான் சத்ருவாக ஆவான். ஆன்மாவே ஒருவனை நமக்கு நண்பனாக்கவும் சத்ருவாக்கவும் அழிக்கவும் முன்னுக்குக் கொண்டுவரவும் காரணமாம். ஜிதேந்த்ரியன், மான அவமானங்களிலும் சத்ரு மித்ரர்களிடமும் ஸுவர்ணத்திலும் மண்ணிலும் ஸமமாக இருப்பான். உடல், களைத்திருக்கும்போதும் மனங்கலங்கி வ்யாகூலமாய் இருக்கும்போதும் பசித்தபோதும் அதி சீதள அதி உஷ்ணமான விடங்களிலும் சப்தமுள்ள விடத்திலும் பழைய கட்டிடத்திலும் சத்தமுள்ள சுவர்களினருகிலும் கிணற்றங்கரையிலும் ஶ்மஶானத்திலும் நதியிலும் நாற்சந்தியிலும் புற்றுள்ளவிடத்திலும் பிசாசாதிகளுள்ளவிடத்திலும் யோகாப்யாஸம் செய்யக் கூடாது. தவறான வழியில் தகாதவிடத்தில் யோகம் செய்தால் நினைவு மறையும். ஊமை, செவிடு, மந்தமாதல், ஜ்வரம், ஜடனாய் இருத்தல் முதலியன உண்டாகும். அதிக உணவு, உணவே இல்லாமை, அதிகத் தூக்கம். தூக்கமே இல்லாமை முதலியவைகள் கூடாது. ஸங்கல்பங்களை விட்டு பக்ஷிகளைப் போல் கொஞ்சம் கொஞ்சமாக வெளியில் செல்லும் மனதை யடைக்க வேண்டும். சஞ்சலமான சித்தத்தை யடக்கி உலகில் தன்னையும் தன்னிடத்தில் உலகையும் பார்ப்பவனை நான் ஒருபொழுதும் விடுவதில்லை. அவனும் ஒரு க்ஷணமும் என்னை விடுவதில்லை.

அடக்கமுடியாத துஷ்டமான மனதை யடக்குகின்றவன் ஏற்றம்போல் இறங்கி ஏறுகின்ற ஸம்ஸார சக்ரத்தில் இருந்து விடுபடுவான். அதி துக்கத்தினால் வைராக்யமும் அதி போகத்தினால் ஆசையில்லாமையும் உண்டாகலாம். ஆனால் அவை நிலைத்திருப்பதில்லை. குருவின் அருள், ஸத்ஸங்கம் அப்யாஸம் இவை மனதை யடக்க ஸாதனங்களாம். மனதை யடக்காமல் யோகமில்லை. யோகாப்யாஸம் செய்பவன் யோக ஸித்தியை அடையாமல் இறந்தாலும் யோகிகளின் குலத்திலோ சுத்தமான ராஜகுலத்திலோ பிறந்து மறுபடியும் யோகாப்யாஸத்தைத்

துவக்குவான். நன்மை செய்தவர்களுக்கு ஒரு நாளும் குறைவு இல்லை. க்ஞான நிஷ்டை, தபோ நிஷ்டை, யோக நிஷ்டை இவைகளைவிட எனது பக்தி நிஷ்டையிலுள்ளவன் சிறந்தவன்.

## 6. புத்தியோகம்.

எங்குமுள்ள என்னை அறிந்து மோக்ஷமடையக் கூடிய புத்தியோகத்தைக் கூறுகிறேன் கேள் :— அதே முக்திக்கு முதல் ஸாதனமாம். முதலில் எனது ப்ரக்ருதியை அறி. அதன் பிறகு என்னை அறிவாய். என்னையறிந்தவன் விக்ஞான ஸம்பத்தைப் பெறுவான். பூமி அக்னி ஆகாயம் அஹங்காரம் ஜலம் சித்தம் புத்தி காற்று சந்த்ர சூர்யர் யாகம் செய்தவர் இந்த பதினொன்றும் எனது ப்ரக்ருதியாம். ஜீவஸ்வரூபமாய் இருக்கின்ற மற்றொரு ப்ரக்ருதியும் மூவுலகையும் நான் வ்யாபித்திருப்பதாக சில பெரியோர்கள் கூறுகின்றனர். இவ்விரண்டுகளாலும் சராசரமான ஜகத் உண்டாகின்றது. ப்ரக்ருதி ஸம்பந்தத்தினால் ஸ்ருஷ்டி ஸ்திதி லயம் உண்டாகின்றன. இந்த தத்வத்தை யறிய ஒரு சிலரே முயற்சிக்கின்றனர். முன்னம் வர்ணாஶ்ரம தர்மத்தைப் பூர்ணமாக அனுஷ்டித்த புண்யத்தினால் முயற்சி செய்யும் பலரில் என்னை ஒரு சிலரே தர்சிக்கின்றனர்.

பூமியில் கந்தமாகவும் அக்னியில் தேஜஸ்ஸாகவும் சூர்யனிடம் ப்ரபையாகவும் ஜலத்தில் ரஸமாகவும் புத்திசாலியிடம் புத்தியாகவும் தபஸ்வியிடம் தபஸ்ஸாகவும் பலிஷ்டரிடத்தில் பலமாகவும் நான் இருக்கிறேன். மாயையால் மோஹமடைந்தவன் என்னை அறிவதில்லை. அனேக ஜன்மங்களெடுத்த பின்பே முடிவில் என்னை அடைந்து முக்தி பெறுகிறான். சிலர் இதர தேவதைகளை உபாஸிக்கின்றார்கள். யார் என்னை எப்படி உபாஸிக்கின்றார்களோ அப்படியே அவருக்கு இஷ்டத்தை நான் பூர்த்தி செய்கிறேன். நான் எல்லோரையும் அறிவேன். என் நிஜரூபத்தை ஒருவரும் அறிவதில்லை. பாபிகளுக்கும் அக்ஞானிகளுக்கும் என் ஸ்வரூபம் விளங்காது. என்னை நினைத்துக்கொண்டே ப்ராணனை விடுபவர் மறு பிறவியடையார். எந்த எந்த தேவரை நினைத்து இறந்தாலும்



125430

அந்தந்த தேவ லோகத்திற்குச் செல்வர். நானே பல தேவதாரூபங்களாக இருக்கின்றேன். நதிகள் எல்லாம் கடலை அடைவதுபோல் எல்லோரும் என்னையே அடைகின்றனர். ப்ரஹ்மாதி லோகம் சென்றவர் பூமிக்குத் திரும்புவர். என்னை அடைந்தவர் எப்போதும் திரும்பார். ஆதலால் என்னையே ஸதா நினை. ஸதா என்னையே நினைப்பவருடைய குடும்ப யோகக்ஷேமத்தை நான் வஹிக்கின்றேன். இறப்பவர் சுக்ல மார்க்கம் க்ருஷ்ண மார்க்கம் என்ற இருவகையாகவும் செல்கின்றனர். சுக்ல மார்கமாகச் சென்றவர் திரும்புவதில்லை. க்ருஷ்ண மார்கமாகச் சென்றவர் திரும்புவர்.

## 7. உபாஸநா யோகம்.

பகல், சுக்லபக்ஷம், சூர்யன் ஜ்யோதிஸ் இந்த வழியாகச் செல்வது சுக்லம் அல்லது அர்ச்சிராதி மார்கம் எனப்படும். இரவு, தூமம், சந்திர ஜ்யோதிஸ் இவ்வழியாகச் செல்வது தக்ஷிணமல்லது தூமமார்கம் எனப்படும். கண்ணுக்குப் புலப்படுவதும் புலப்படாததுமான எல்லாம் ப்ரஹ்மமே. பஞ்சபூத வடிவமானது அழியக்கூடியது. அதனுள் ஜீவரூபமானது அழியாதது. இவ்விரண்டிற்கும் மேலானது சுத்தமான ஆத்ம தத்துவம். என்னை அறியாதவர்கள் பன்முறை பிறந்து இறக்கும் ஸம்ஸாரத்தை அடைகிறார்கள். என்னை த்யானம் ஆவாஹனாதி ஷோட ஶோபசாரங்களால் உபாஸிக்கின்றவர்களுக்கு இஷ்டத்தைப் பூர்த்திசெய்து வைக்கிறேன்.

மானஸிகபூஜையும் செய்து ஸித்திபெறலாம். பழம், இலை, புஷ்பம், கிழங்கு, ஜலம் முதலியவைகளால் என்னைப் பூஜித்து, இஷ்டத்தைப் பெறலாம். மூன்று வகையான பூஜைகளில் மானஸிக பூஜையே சிறந்தது. நாலு ஆஶ்ரமத்தைச் சார்ந்தவர்களில் எவரேனும் வாசிகம், காயிகம், மானஸிகம் என்ற மூன்றுவகைகளில் ஒன்றால் என்னைப் பூஜித்து சித்திபெறலாம். இதர தேவதைகளை பூஜிப்பவரும் விதிதவறி என்னையே பூஜித்தவராவர். என்னையோ இதர தேவதைகளையோ த்வேஷத்துடன் பூஜித்தால் ஆயிரம் கல்பம்வரை நரகமனுபவிப்பர். பூத சுத்தி, ப்ராணாயாமம், மனோ வ்ருத்தியை அடக்குதல், ந்யாஸம், அந்தர்மாத்ருகா ந்யாஸம், பாஹ்ய கரண

ந்யாஸம், மூலமந்த்ர ந்யாஸம் இவைகளைச் செய்து ஜபம் செய்யவேண்டும். குருவினிடமிருந்து மந்த்ரோபதேசம் பெற்று ஜபம் செய்து ஸ்தோத்ரம் செய்ய வேண்டும். அங்ஙனம் உபாஸிப்பவர் மோக்ஷம் பெறுவர். உபாஸனை இல்லாத மனிதரின் ஜன்மா வீணாகும். யக்ஞம், ஓஷதிகள், மந்த்ரம், அக்னி, ஆஜ்யம், ஹவிஸ், ஹோமம், த்யானம், ஸ்தோத்ரம், பக்தி, உபாஸனை, ஓங்காரம், வாயு, உத்பத்தி, போஷணை, அம்ருதம், ஆன்மா, தானம், ஜபம், வேதம் எல்லாம் நானே. எதைச் செய்கின்றனையோ அதை எனக்கு அர்ப்பணம் செய். மங்கையர்களும் தீய நெறியில் இருப்பவர்களும் கூட எனது பக்தியினால் நலமடைவர். எனது பக்தன் ஒருநாளும் கெடான். என்னுடைய உற்பத்தியையும் விபூதியையும் தேவர்களும் ரிஷிகளும்கூட அறியமாட்டார்கள். பலவகையான விபூதிகளால் உலகை வ்யாபித்துக்கொண்டு இருக்கிறேன். விசேஷமானதைக் கேள் :—

## 8. விச்வரூபாத்யாயம்.

**வரேண்யன்:-** பகவன்! உமது விபூதிகளை நாரதர் எனக்குக் கூறினர். தாங்களும் உரைத்தீர்கள். நானும் நாரதரும் பூர்ணமாக உணர்ந்தோமில்லை. ஆதலால் உமது வியாபகமான ரூபத்தைக்காட்டுவீரா என வேண்டினன்.

**கஜானனர்:-** என் ஒருவனிடத்திலேயே ஸகல உலகையும் பார். எவரும் பாராத பல ஆச்சர்யமான திவ்ய ரூபங்களைப் பார். எனது மஹிமையால் உனக்குத் திவ்யக் கண்ணைத் தருகிறேன். ஊனக்கண்ணால் அதைப் பார்க்க முடியாது. என திவ்யக்கண்ணைத் தந்து அத்புதமான விச்வரூபத்தை எடுத்தார். கணக்கிட முடியாத அழகிய முகம், கைகால்கள், அழகிய வாஸனை சந்தனப்பூச்சு திவ்ய ஆபரணம், மாலை, கோடி ஸூர்ய பிரகாசமான திவ்ய ஆயுதங்களுடன் அவ்வுடலில் மூன்று லோகமும் காணப் பட்டது.

**வரேண்யன்:-** ப்ரபோ! உமது உடலில் தேவர், ரிஷி பித்ருக்கள், பாதாளம், கடல், த்வீபங்கள், மலைகள், ஸப்த ரிஷிகள், பூமி, த்யுலோகம், ஸ்வர்க்கம், பாம்புகள், த்ரிமூர்த்திகள் முதலியவற்றைக் காண்கிறேன். ஆதியும் அந்தமும் இல்லாதரூபம், எண்ணிறந்த தலைகள்! கிரீடம்



எரியும் தீ போன்ற ஜ்வாலையால் காணமுடியாத ரூபம், விசாலமான மார்பு! ஸுரர் வித்யாதரர் கந்தர்வர் அப்ஸரஸ் ஆகிய இவர்களால் போற்றப் படுகிறீர். மஹா ஆச்சர்யத்துடன் காணப்படுகிறீர். பக்தியுடன் பலரால் ஸேவிக்கப்படுகிறீர்! அக்ஷய்யமானவர் நீர். தர்மத்தை ரக்ஷிப்பவர்.

பாதாளம் முதல் ஸ்வர்க்கம் வரை உமது உடல் வ்யாபித்து இருக்கிறது. இதைக் கண்டு எல்லோரும் நடுங்குகின்றனர். நானும் நடுங்குகிறேன். கோரப்பற்களும் பிரளய காலாக்னிபோல் பயங்கரமான முகமும் ஆகாசத்தை அளாவும் ஜடையையும் பார்த்து பிரமிக்கிறேன். தேவாஸுர கணங்கள் உமது முகத்தில் வேகமாக நுழைகின்றன. நீரே இந்திரன் அக்னி முதலிய தேவர்களாகவும் ஸமஸ்த ஜகத்தாகவும் இருக்கிறீர். உம்மை நமஸ்கரிக்கிறேன். உமது பழைய சாந்தமான அழகிய ரூபத்தைக் காட்டும். உமது லீலையை யார் அறிவர்? உமது அருளால் திவ்ய சக்ஷுஸ்ஸைப் பெற்று இத்தகைய உயர்ந்த ரூபத்தை தர்சித்தேன். உமக்கு பல கோடி நமஸ்காரம்.

**கணேசன்:-** யோகமில்லாதவர் இந்த ரூபத்தைத் தர்சிக்க முடியாது. எனதருளால் ஸநகாதிகள் பார்க்கின்றார்கள். வேத வேதாங்க மறிந்தவர்களும் சாஸ்த்ர மறிந்தவர்களும் தாந தர்ம யக்ஞம் செய்தவர்களும் கூட இதை தர்சிக்க முடியாது. பக்தியினால் மாத்ரம் தர்சிக்கலாம். பயம் வேண்டாம், அழகிய உருவைப் பார். என்னிடம் பக்தி கொள். ஸகல பற்றுகளையும் விடு. எனக்காகவே கர்மாவைச் செய். ஸகல ப்ராணிகளிடமும் ஸமமாக இரு. கோபத்தை விடு. என்னை அடைவாய்.

## 9. க்ஷேத்ர க்ஞாத்ருக்ஞேய விவேக யோகம்.

ஆழ்ந்த பக்தியுடன் ஸகுணமாக என்னை உபாஸிப்பவரும் நிர்குணனாக உபாஸிப்பவரும் முக்தி பெறுவர். ஆனால் நிர்குணமாக உபாஸிப்பது சிறிது சிரமம். அவ்யக்த ஸ்வரூபத்தை உபாஸித்து பெறும் முக்தியையே வியக்த ரூபத்தை உபாஸித்து சுலபமாகப் பெறலாம். க்ஞானிகளைவிட வேதாந்த க்ஞானமில்லாத பக்தன் கூட சிறந்தவனாவான். பக்தி, ஞானம் இல்லாதவன் பரம நீச

னுவான். பக்தியுள்ள சண்டாளனும் பக்தியில்லா பிராம்மணனை விட சிறந்தவனுவான். சுகர் ஸநகர் நாரதர் ஆகியவர் பக்தியினுலேயே முக்தி அடைந்தனர். ஆதலால் நீயும் பக்தி செய்து முக்தி பெறு. மநதை என்னிடத்தில் ஸதா நிறுத்த முடியாவிடில் அப்யாஸ யோகம் செய்து என்னை அடைய முயற்சி செய். அதுவும் முடியாவிடில் ஸகல கர்மாக்களையும் செய்து எனக்கு அர்ப்பணம் செய். அதைச் செய்யவும் முடியாவிடில் ஸகல கர்ம பலனையும் தியாகம் செய். ஜபத்தை விட புத்தி சிறந்தது. அதிலும் த்யானம் சிறந்தது. ஸகல கர்ம பல த்யாகம் அதைவிட சிறந்தது. ஶாந்தி எல்லாவற்றிலும் மிகச் சிறந்தது. ஸுகதுக்கங்களை ஸமமாக எண்ணுபவன் எனக்குப் பிரியமானவன். எவனைக் கண்டு உலகம் பயப்படவில்லையோ உலகைக் கண்டு எவன் பயப்படவில்லையோ அவன் எனக்குப் பிரியமானவன். க்ஷேத்ர க்ஷேத்ரங்களை அறிந்தவன் எனக்கு மிகப்பிரியமானவன்.

ஐந்து பூதங்கள் தன் மாத்ரைகள் கர்மேந்திரியங்கள் அஹங்காரம் மநஸ் புத்தி க்ஞாநேந்த்ரியங்கள் இச்சை வ்யக்தம் த்ருதித்வேஷம் ஸுகதுக்கம் சேதநத்துடன் கூடிய இந்த ஸமூஹம் க்ஷேத்ரமெனப்படும். ஸர்வாந்தர்யாமியும் க்ஷேத்ரத்தை அறிந்தவனுமான நான் க்ஷேத்ரக்ஞன். கபடமின்மை குரு ஶுஶ்ருஷை வைராக்யம் ஶௌசம் கர்வமின்மை ஸமத்ருஷ்டி த்ருடபக்தி ஏகாந்த நிலை ஶமதமம் இவைகளுடன் கூடிய க்ஞானமே க்ஞாநமாகும். இந்த க்ஞானத்தால் அறியத் தக்க வஸ்து ஸத்தும் அஸத்தும் அல்லாதது. எங்கும் எப்போதும் உளது. ஸூக்ஷ்ம புத்தியினுல் அறியத்தக்கது. இதே பரபிரும்மம் எனப்படும்.

ஸத்வம் ரஜஸ் தமஸ் என்ற குணங்கள் உடலில் ஜீவனைத் தன்தன் செயலால் கட்டுப்படுத்துகின்றன. பிரகாஶம் க்ஞானம் இவைகள் உள்ளபோது ஸத்வ குணமும், லோபம் ஆசையுள்ளபோது ரஜஸ் குணமும் மோஹம் அக்ஞானமுள்ளபோது தமோ குணமும் வ்ருத்தியாகி இருக்கிறதென அறியலாம். ஸுகத்தைத் தரும் ஸத்வகுணம் பெருகி இருக்கும் பொழுது ஒருவன் இறந்தால் நற்கதிபெறுவான். எப்போதும் ஸத்வத்தை



விருத்திசெய். ஏகாக்ரமான பக்தியால் நான் அக்நி முதலிய ஸர்வ வஸ்துக்களிலும் இருப்பதாக நினை. அக்நியாக இருந்து எல்லோரும் உண்ணும் உணவை நானே ஜீர்ணமாகும்படி செய்கிறேன். என்னை யார் எந்த தேவதையாக உபாஸிக்கிருரோ அந்த தேவதா ரூபமாக இருந்து அருள் புரிகிறேன்.

## 10. யோகோபதேசம்.

தெய்வீ ஸம்பத், ஆஸுரீ ஸம்பத், ராக்ஷஸீ ஸம்பத் என மூன்று வகையாக உள்ள பிரக்ருதியையும் அதன் பலனையும் கேள். முதலான தெய்வீக ப்ரக்ருதி, முக்தியைத்தரும். மற்றவை பந்தத்தை அளிக்கும். கோள் சொல்லாமை, தயை, கோபமின்மை, கபடமின்மை, அஹிம்ஸை, தைர்யம், பொறுமை, ஶௌசம், கர்வமின்மை முதலியவை தெய்வ பிரகிருதியின் அடையாளமாகும். அதிகப் பேச்சு, கர்வம், அக்ஞாநம், கோபம் முதலியவை அஸுர பிரக்ருதியின் அடையாளமாம். நிஷ்டூரமான பேச்சு, மதம், மோஹம், அஹங்காரம், ஹிம்ஸை, அடக்கமின்மை, க்ரூர கர்மா, ஸத்துக்களிடம் அவநம்பிக்கை, வேத பிராம்மண நிந்தை, ஓயாத ஆசை முதலியவை ராக்ஷஸ பிரக்ருதியின் சின்னங்கள். என்னிடம் பக்தியில்லாமல் ராக்ஷஸ ப்ரக்ருதியில் உள்ளவர் பலர் இருக்கின்றனர். தாமஸ குணமுள்ளவர் ரௌரவ நரகத்தையே அடைவர். பிறகு பூமியில் கூனுகவும், குருடாகவும், நொண்டியாகவும், ஏழையாகவும் பிறப்பர். மறுபடியும் பாபம் செய்து நரகத்தில் உழல்கிருர்கள். யக்ஞயாகாதிகளைச் செய்து சிலர் ஸ்வர்க்கம் செல்கிருர்கள். என்னிடத்தில் பக்தி உண்டாவது எல்லோருக்கும் சுலபமல்ல. மோஹத்தினுல் நான் கர்த்தா, போக்தா, ஈஶ்வரன் என நினைக்கின்ருர்கள். இந்த எண்ணம் நரகத்தையே அளிக்கும். ஆதலால் அஸுராதி குணங்களை விட்டு தெய்வ ப்ரக்ருதியைக் கைக்கொள். என்னிடம் பக்திகொள்! பக்தியும் மூன்று குணங்களால் முவ்வகையாகும். விதிப்படி தேவபூஜை செய்து ஸாத்விக பக்தியாகும். ஜனன மரணங்களை யளிப்பது ராஜஸ பக்தியாம். உடலை ஹிம்ஸை செய்துகொண்டு யக்ஷ ராக்ஷஸர்களை ஸேவிப்பது தாமஸ பக்தியாம். காமம்

க்ரோதம், லோபம், தம்பம் இந் நான்கும் நரகத்திற்கு வாயற்படிகளாம். ஆதலால் அவைகளை விடு.

## 11. மூன்றுவகை வஸ்து நிரூபணயோகம்.

காயிகம், மானஸிகம், வாசிகம் என தபஸ் மூவ் வகைப்படும். ஶௌசம் ப்ரம்மசர்ய நியமம், அஹிம்ஸை, தேவ ப்ராம்மண குருபூஜை, ஸ்வதர்மம் இவைகள் உடலால் செய்யும் தவமாம். ப்ரியமான சொல், ஸத்யம், வேத சாஸ்த்ர அத்யயனம் இவை வாசிக தபஸ்ஸாம். மனம் தெளிதல், சாந்தி, மௌனம், இந்திரியங்களை அடக்குதல், நல்ல எண்ணம் இவை மானஸிக தவமாகும். பலனில் ஆசையில்லாமல் ஶ்ரத்தையோடு செய்யும் தவம் ஸாத்விகமாம். பேருக்காகவும், கௌரவத்திற்காகவும், தம்பத்தினுல் செய்வது ராஜஸமாம். பிறரைப் பீடிப்பதற்காகச் செய்வது தாமஸமாம். சாஸ்திரத்தையொட்டி நல்ல தேசகால பாத்ரத்தில் அளிப்பது ஸாத்விக தானம். உபகாரத்தையும் பலத்தையும் எதிர்பார்த்து பக்தியில்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டு அளிப்பது ராஜஸமாம். அகால அதேச அபாத்திரத்தில் அவமதிப்புடன் தருவது தாமாஸமாம். ஸகல ப்ராணிகளிடமும் நான் ஒருவனே இருக்கிறேன். மற்றவை யெல்லாம் அழியக் கூடியது என்ற எண்ணம் ஸாத்விகமாம். ப்ராணிகள் எல்லாம் வெவ்வேருனவை. பகவான் அழியாதவர் என்று எண்ணுவது ராஜஸமாம். உலகம் உண்டாக, காரண வஸ்துவே இல்லை. எல்லாம் அஸத்யமானது என்பது தாமஸமாம். காமக்ரோதமின்றி நித்ய கர்மாவைச் செய்வது ஸாத்விகமாம். மிகச்ரமத்துடன் பலத்தையும் கருதி தம்பத்திற்காகச் செய்வது ராஜஸமாம். தனது சக்தி, த்ரவ்ய நாசம் இவைகளைக் கவனியாமல் அக்ஞானத்தினுல் செய்வது தாமஸமாம். ஸித்தி, அஸித்திகளில் மாறுதலில்லாமல் அஹங்காரமில்லாமல் செய்பவன் ஸாத்விக கர்த்தா. ஶோக மோகத்துடன் ஹிம்ஸை லோபம், அசுத்தம் இவைகளோடுகூடியவன் ராஜஸகர்த்தா. அக்ஞானத்துடன் பிறரை ஹிம்ஸிப்பவன், சோம்பல் வீண் தர்க்கமிவைகள் உள்ளவன் தாமஸகர்த்தா.

இந்த்ரியங்களை யடக்குதல், பொறுமை, கபடமில்லாமை, தபஸ், ஆத்மக்ஞானம், வேத சாஸ்த்ர புராண



க்ஞானம், அனுஷ்டானம் இவைகள் ப்ராம்மணர்களுக் குறிய கர்மாவாம். த்ரிடமாய் இருத்தல், ஶௌர்யம், போரில் பின் வாங்காமை, சரண் புகுந்தவர்களை ரக்ஷித்தல், இவை க்ஷத்ரியருக்குண்டான இயற்கையான கர்மாக்களாம். வியாபாரம் செய்வது, பூமியை உழுவது, பசுக்களைக் காப்பது, ஆகியவை வைச்யரது கர்மாக் களாம். தானம், மூன்று வர்ணத்தாருக்கும் பணிவிடை செய்வது ஸதா சிவனை ஸேவிப்பது இவை நான்காவது வர்ணத்தவரின் கர்மாக்களாம்.

அவரவர் என்னிடம் கர்மாவை அர்ப்பணம் செய்து தம் தம் கர்மாவை விடாமல் செய்தால் ஸ்திரமான எனது பதத்தை அடைவர்.

இதைக்கேட்ட வரேண்ய மஹாராஜன் விதிப்படி அவைகளைச் செய்து மோக்ஷம் அடைந்தான். இதைக் கேழ்ப்போர் சொல்வோர் படிப்போர் நற்கதியடைவர். விநாயகரை அர்ச்சித்து இதைப் பாராயணம் செய்தால் ப்ரம்மஹத்தி முதலிய ஸகல பாபங்களும் அகலும். சதுர்த்தியில் படித்தால் ப்ரம்மஸ்வரூபத்தை அடைவர். பாத்ரபத சுக்ல சதுர்த்தியில் மண்ணினுல் விநாயகமூர்த்தி யைச் செய்து பூஜை செய்து எழுமுறை கணேச கீதையைப் படித்தால் ஸகலவிதமான போக பாக்யங்களையும் அடைவார்.

### ஸ்ரீ கணேச கீதை முற்றிற்று.

வியாஸருக்கு ப்ரஹ்மா கூறினர். விநயகர் தன் இஷ்டப்படி பல ரூபங்களுடனிருக்கின்றர். அவருடைய முகத்திலிருந்தும் பார்வதியினுடைய கர்ப்பத்திலிருந்தும், பார்வதி தேஹத்தில் உள்ள மலத்திலிருந்தும், இரண்டு முகங்களுடனும் இரண்டு கரங்களுடனும் ஐந்து முகங் களுடனும் ஆறு முகங்களுடனும் பத்து கரங்களுடனும் தன்னிஷ்டப்படி பல விசித்ர ரூபங்களைத் தரிக்கிறர். லிங்க புராணத்தில் சிவனிடமிருந்து ப்ரஹ்மாவும் விஷ்ணுவும் உண்டானதாகவும் ஸ்காந்தத்தில் ப்ரஹ்மாவின் கண்ணிலிருந்து சிவன் உண்டானதாகவும் சிவன் விஷ்ணுவைத் துதிப்பதாகவும் விஷ்ணு சிவனைத் துதிப்பதாகவும் பூமியில் ராமநாம பஞ்சாக்ஷரமே தாரகமென்றும்

தாரகத்தை சிவன் ஸ்தாபித்ததாகவும் சிவனிடமிருந்து ஸ்ருஷ்டி என்றும் பிரம்மாவினிடமிருந்தும் தேவியினிடம் இருந்தும் ஸ்ருஷ்டி என்றும் வெவ்வேறாக கூறப்படுகின்றன. இதில் ஸந்தேஹம் கொள்ளலாகாது. ஒவ்வொரு ஸமயம் அங்ஙனம் தோன்றுவது சாஸ்திர ஸம்மதமே. கலியுக ஸம்பந்தமான கதையைக் கேள்: கலியில் ஆசாரமில்லாதவரதிகம் ப்ராம்மணர்கள்; வேதம் கர்மானுஷ்டானமில்லாதவர்களாவர். துஷ்டர்களிடத்தில் தானம் வாங்குதல், பராபவதம், பரநிந்தை, பரஸ்த்ரீ கமனம், நம்பிக்கைத்ரோஹம் முதலிய பாபங்களைச் செய்வார்கள். அதனால் காலத்தில் மழைபொழியாது. ஜீவநதியின் அருகே சென்று பயிரிடுவார்கள். பலமுள்ளவன் ஏழைகளை ஹிம்ஸிப்பான். நான்காவது வர்ணத்தவர் வேதம் படிப்பார்கள். ப்ராம்மணர்கள் நான்காவது வர்ணத்தவரின் கர்மாவைச் செய்வார்கள். சண்டாளனிடமும் தானம் வாங்குவார்கள். பரம தரித்ரனாகி வாங்கிய பணத்தை இல்லை என்று ஸத்யம் செய்வார்கள். பணம் பெற்று பொய் சாக்ஷி சொல்வார்கள். மது மாம்ஸம் உண்பார்கள். குலதேவதைகளை விட்டு துர்தேவதைகளைப் பூசிப்பார்கள். ஜீவனத்திற்காக பல வேஷம் தரிப்பார்கள். வர்ணாச்ரமங்களின் தர்மத்தைவிட்டு எல்லாம் ஒன்றாகும்படி முயற்சிப்பார்கள் ஸ்த்ரீகள் பாதிவ்ரத்யத்தை விட்டு பல புருஷரை மணப்பார்கள். க்ஷத்ரியன் முதலியவர்களும் யாசனை செய்வார்கள். ஒரே ம்லேச்சமயமாகி ஸத்யம், தயை முதலியவைகளை விட்டுத் திரிவார்கள். பூமிவிளையாது. மரம் காய்க்காது. ஐந்து. ஆறு. வயதில் பெண்கள் ப்ரஸவிப்பார்கள். பதினாறு வயதில் எல்லோரும் இறப்பார்கள். தீர்த்தங்களும் தேவதைகளும் மறைந்து விடுவார்கள். "ஸ்வதா" "ஸ்வாஹா" முதலியவைகள் இல்லாததால் தேவர்களும் உபவாசம் இருப்பார்கள். எல்லோரும் விநாயகரை ப்ரார்த்திப்பார்கள்.

விநாயகர், கஜானனர், சூர்பகர்ணர் தூமகேது என்ற பெயர்களோடு அவதரிப்பார். நீலக்குதிரையின் மேல் ஏறி துஷ்டர்களைக் கொல்வார். குகையில் கந்த மூலங்களைப் புசித்துக் கொண்டிருக்கும் பிராம்மணர்களை அழைத்து பூமியை அளித்து தர்மத்தைச் செய்யும்படி



ஏற்பாடு செய்வார். பிறகு க்ருதயுக தர்மம் நிலைத்து நிற்கும். அவரது மகிமையைக்கூற எவருக்கும் சக்தியில்லை.

இங்ஙனம் ப்ருகு கூறியதை ஸோமகாந்த மகாராஜன் கேட்டு ப்ருகுவின் பாதத்தில் விழுந்து வணங்கி வியாஸர் முன் பகவான் தோன்றி எப்படி அருள் புரிந்தார்? எனக் கேழ்க்க ப்ருகு கூறினார். சிவந்த மாலையும் வஸ்த்ரமும் தரித்து கோடி ஸூர்ய ப்ரகாசனாகவும் ஸகல திவ்ய ஆபரணங்களைத் தரித்தவராகவும் வ்யாஸருக்குக் காக்ஷியளித்தார். அவர் அதைக்கண்டு பயந்த பொழுது, ரிஷே! அபயம்! நீ த்யானம் செய்த வண்ணம் உனக்குக் காக்ஷியளித்தேன். ஆதியில் நீ என்னை அலக்ஷ்யம் செய்ததால் சக்தியை இழந்தாய். ப்ரம்மாவின் மூலம் எனது சரிதத்தையும் மகிமையையும் கேட்டு பக்தி செய்ததால் பதினெண் புராணங்களையும் பதினெட்டு உப புராணங்களையும் எழுத சக்தி பெறுவாய் என்று கூறி மறைந்தார். வ்யாஸரும் அங்ஙனமே அவைகளைச் செய்து முடித்து ஸதா விநாயகரை ஸ்துதி செய்து வந்தார்.

ப்ரஹ்மாவிடமிருந்து கேட்டு விநாயக புராணத்தை எழுதி வைசம்பாயனருக்கு உபதேசித்தார். ஸோமகாந்தன் ஒவ்வொரு தினமும் இப் புராணத்தைக்கேட்டு அந்த புண்யத்தை அருகில் பட்டுக்கிடந்த மாமரத்துக்கு ஜலத்துடன் விட்டான். ஸோமகாந்தன் மீது இருந்த ப்ரம்மஹத்தி தோஷத்தை ப்ருகுமுனிவர் அம்மரத்தின் மீது ஆவாஹனம் செய்தவுடன் அம்மரம் பற்றி எறிந்தது. புராண ஶ்ரவண புண்யத்தால் துளிர்விட்டு முன்னைவிட அழகாக வளர்ந்து நின்றது. இதனால் ஆஶ்சர்யமடைந்த ஸோமகாந்தன் முனிவரைப் பணிந்து போற்றினான். அச்சமயம் ஆகாயத்திலிருந்து விமானம்வந்து இறங்க அதைக் கண்ட முனிவர், அரசே! உனக்காகத்தான் இது வருகிறது. அதில் ஏறி விநாயகரது உலகம் செல்வாய் என்றார்.

விநாயகர் தூதர்களும் அவனை அங்ஙனமே அழைக்க, மனைவியுடன் முனிவரையும் தூதர்களையும் பணிந்து திவ்ய தேஹம் பெற்று கிளம்பினார். மனைவி அரசாளும் ஹேமகண்டனைக் கண்டு கூறிவிட்டுச் செல்வோம் என்றாள். தூதர்களும் அதற்கு இசைய விமானம் தேவநகரம் சென்றது. ஹேமகண்டனும் அவனது மந்திரிகளும் குடிகளும் ஒன்றுகூடி ஆஶ்சர்யத்துடன் திவ்ய தேஹம் பெற்று

125430

விளங்கும் ஸோமகாந்தனைப் பணிந்து போற்றினர். எல்லோரும் ஆனந்தபுவனம் செல்ல ஆசைப்பட்டு அரசனை விட்டுப் பிரிய மனமில்லாமல் தாங்கள் போகவேண்டாம்; போனல் எங்களையும் அழைத்துச்செல்லுங்கள் என கதறினர்கள். அங்கு செல்வதற்கேற்ற புண்யமும் தூதர்களது உத்தரவும் இல்லாமல் நான் எப்படி அழைத்துச் செல்வது என்ருன் அரசன். தூதர்கள், அரசே! நீ கணேச புராணத்தைக் கேட்ட புண்யத்தை ஜலதாரையுடன் அவர்களுக்கு அளி. அவர்களும் பாபமகன்று திவ்ய தேஹம் பெற்று வருவர் என்ருர்.

ஹேமகண்டனது புத்திரனுக்கு இராஜ்யத்தையளித்து அனைவரும் அரசனளித்த புராண ஶ்ரவண புண்யத்தால் ஆனந்த புவனம் சென்ருர்கள்.

## புராண ச்ரவண மஹிமை.

இப் புராணத்தை ப்ரஹ்மா லோமசருக்குக்கூறும் பொழுது ஊமையாக இருந்த ஒரு ரிஷி அதைக்கேட்டு நன்கு பேசும் சக்தியைப் பெற்ருர். அவர் அதைப் பாராயணம் செய்து பலருக்கும் உபதேசம் செய்தார். இக்ஷ்வாகு வம்சத்தில் பிறந்த ஓர் அரசன் புத்ரபாக்யத்தைப்பெற பற்பல தர்மங்களைச் செய்தார். அப்படியும் புத்ரனில்லாதுபோகவே, தற்செயலாக வந்த ம்ருகரிஷி விநாயக புராணத்தைக்கூற அதனலவர் புத்ர பாக்யத்தை அடைந்தார். ஸகர புத்ரர்களில் ஒருவன் காலில்லாமல் இருந்து லோமச மஹரிஷியிடம் பன்னிரண்டு ஆண்டுகள் கணேச புராணம் கேட்டு கால்களைப் பெற்ருர். பதினெட்டுப் புராணங்களைக் கேழ்ப்பதினல் உண்டாகும் பலனை இந்த ஒரு புராண ஶ்ரவணத்தினல் பெறலாம். ஸகல வேதங்களையும் அத்யயனம் செய்வது, ஸர்வயக்ஞங்களைச் செய்வது, பஞ்சாக்னி மத்தியில் தவம் செய்வது முதலிய ஸகல புண்யங்களையும் விட கணேச புராணத்தை சிரவணம் செய்வது மிகுந்த புண்யத்தைத்தரும். இதன் பெருமையைக்கூற எவராலுமியலாது.



ஓம் ஸ்ரீ மஹா கணபதயே நம:

ஸ்ரீ விநாயக புராணம் முற்றிற்று.

---